

ஆகஸ்ட் 2010 August | இதழ் 235 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION









20 வது ஆண்டு th Year

a monthly information digest
இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

Growing with the Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

# உண்மையின் வெற்றி!

பொய்யான செய்தியை வெளியிட்டமைக்காக இங்கிலாந்தின் இரண்டு பிரசித்திபெற்ற ஆங்கில ஊடகங்கள் நீதிமன்றில் பகிரங்கமாக நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரிய சம்பவம் கடந்த மாதம் 29ஆம் திகதி நிகழ்ந்தது.

மன்னிப்புடன் மட்டும் நிற்காது வழக்காளிக்கு இந்த இரு ஊடகங்களும் நஷ்ட ஈடாக மொத்தம் 77,500 ஸ்டேலிங் பவுண்களை வழங்கவும் ஒப்புக் கொண்டுள்ளதுடன், வழக்குச் செலவையும் ஏற்றுக் கொண்டுள்ளன.

பொய்யான செய்தி வெளிவந்தபோது ஏற்படுத்தப்பட்ட பரபரப்பைவிட, நீதிமன்றத் தீர்ப்பு சர்வதேசமும் அதிகளவில் சலசலப்புடன் கூடிய பரபரப்பை எற்படுத்திவிட்டது. சுப்பிரமணியம் பரமேஸ்வரன் என்ற 29 வயது தமிழ் இளைஞரே இதன் கதாநாயகர். ஓர் அகதியாக லண்டனில் வாழ்ந்து வரும் இவர், கடந்த வருடம் ஏப்ரல் மாதம் அங்குள்ள நாடாளுமன்ற வளவில் உண்ணாவிரதமொன்றினை மேற்கொண்டார்.

தாயக நெருக்கடி நிலையை நீக்க பிரித்தானிய அரசின் பங்களிப்பைக் கோரி இந்த உண்ணாவிரதத்தை 23 நாட்கள் இவர் மேற்கொண்டார். பிரித்தானிய வெளிவிவகார அமைச்சராகவிருந்த டேவிட் மிலிபான்ட் எழுத்து மூலம் வழங்கிய உறுதிமொழியை ஏற்று உண்ணாவிரதத்தை நிறுத்தினார்.

இது நடைபெற்று ஆறு மாதங்களின் பின்னர் லண்டன் 'டெய்லி மெயில்' பத்திரிகை, பரமேஸ்வரன் உண்ணாவிரதமிருந்தபோது களவாக 'பர்கர்' (burger) சாப்பிட்டதாகவும், அதனை நிரூபிக்கும் காணொளிப் பதிவு லண்டன் நகரப் பொலிசாரிடம் இருப்பதாகவும் செய்தி வெளியிட்டது.

லண்டன் 'சன்' பத்திரிகையின் இணையத்தளம் இந்தப் பொய்ச் செய்தியை அப்படியே பிரதி பண்ணி உலகுக்கு பரபரப்புத் தீனி போட்டது.

இளைஞர் பரமேஸ்வரனின் நேர்மைக்கும், தமிழீழ விடுதலைப் போராட்ட தூய்மைக்கும் களங்கம் ஏற்படுத்துவதாக இச்செய்தி அமைந்ததால் நீதி கேட்டு சட்ட நடவடிக்கை எடுக்கும் நிலை இவருக்கு ஏற்பட்டது.

நிதிநிலைமை சாதகமாக இல்லாத போதிலும் சட்ட நடவடிக்கையில் துணிந்து இறங்கிய பரமேஸ்வரன், இறுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

பிரபல்யமான இரண்டு ஊடகங்களும் தவறான செய்தியை ஏன் வெளியிட்டன, நோக்கம் என்ன, பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பது ஆய்வுக்குரியது.

ஆனால், இந்தப் பொய்ச் செய்தியால் இளைஞர் பரமேஸ்வரன் அடைந்த மனவேதனையும் துயரமும் வார்த்தைகளில் அடக்க முடியாதவை. பகிரங்க மன்னிப்பும் நஷ்டத் தொகையும் அவைகளை முழுமையாக ஈடுசெய்யாது.

பொய்ச் செய்தி காரணமாக நண்பர்களால் ஒதுக்கப்பட்டு, சமூகத்தினால் ஓரம் கட்டப்பட்ட வேளையில் தற்கொலை செய்யும் நிலைக்குத் தாம் தள்ளப்பட்டதான அவரது வார்த்தைகளை நினைத்துப் பார்க்க வேண்டும்.

'டெய்லி மெயில்' மற்றும் லண்டன் 'சன்' ஊடகங்கள் போன்று பொய்யையே பரப்பி வரும் சில தமிழ் ஊடகங்கள் புகலிட நாடுகளில் இயங்கி வருகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது.

பரமேஸ்வரனுக்குக் கிடைத்த ஊடக வெற்றி, இவர்களின் கண்களைத் திறக்குமானால் மிகவும் நல்லது!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றொறன்ரோ மாநகர நெடுஞ்சாலைகளில் வீதிப் பாவனை கட்டணம் அமுலாகும்?

றொறன்ரோவில் அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த புதிய சில திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இவற்றுள் முக்கியமானதாக நெடுஞ்சாலை வீதிகளைப் பாவிக்கும்போது அவற்றுக்குக் கட்டணம் அறவிடும் முறை அமுலாக-லாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

400 தொடரிலக்க நெடுஞ்சாலைகளின் பாவனைக்கு ஒரு கிலோமீட்டர் தூரத்துக்கு பத்து முதல் இருபது சதம் வரை அறவிடப்படலாம். தினசரி நீண்ட தூரம் இந்த நெடுஞ்சாலைகளைப் பாவிப்பவர்களிடமிருந்து வரையறுக்கப்பட்ட ஒரு தொகையை வாராந்த அல்லது மாதாந்த அடிப்படையில் அறவிடவும் ஆலோசிக்கப்படுகின்றது.

உதாரணத்துக்கு, 150 கிலோ மீட்டர் தூரத்துக்குப் போகவும் வரவும் பாவிப்பவர்களிடமிருந்து ஒரு தடவைக்கு 15 முதல் 30 டாலர்கள் வரை அறவிடப்படலாம். நெடுஞ்சாலை வீதிப் பாவனைக்குக் கட்டணம் அறவிடும் முறை தற்போது அமெரிக்காவில் நடைமுறையிலுள்ளது.

இதுதவிர வேறு 12 திட்டங்களும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

* ஒரு லீட்டருக்கு 10 முதல் 20 சதம் வரை பிராந்திய வரியாக எரிபொருளுக்கு விதிப்பது.

* வர்த்தக வாகனங்களின் தரிப்பிட கட்டணமாக புதிதாக நாளொன்றுக்கு 1 முதல் 2 டாலரை விதிப்பது.

* 'டவுண்ரவுண்' என்னும் மத்திய நகருக்குள் நுழையும் வாகனங்களுக்கு விசேட கட்டணம் வசூலித்தல்.

* எச். எஸ். ரி வரிக்கு மேலதிகமாக 1 முதல் 2 சதவீத பிராந்திய விற்பனை வரியை அறிமுகம் செய்தல் என்பவை புதிய ஆலோசனைகளில் சிலவாகும்.

புதிய கட்டணங்கள் வாயிலாக, ஆகக்குறைந்தது ஒரு பில்லியன் டாலரை வருடமொன்றுக்கு மேலதிகமாகப் பெற முடியும்.

## கனடாவில் குடியேறுவதற்கு மொழிப் பரீட்சையில் சித்தியடைவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது

கனடாவில் புதிய குடிவரவாளர்களாக வருவதற்கு விண்ணப்பம் செய்பவர்கள் கனடிய உத்தியோகபூர்வ மொழிகளில் ஒன்றில் (ஆங்கிலம் அல்லது பிரெஞ்ச்) சித்திபெற வேண்டியது அவசியமாக்கப்பட்டுள்ளது. கனடிய குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சரின் விசேட உத்தரவுக்கிணங்க (ministerial instruction), கடந்த யூன் மாதம் 26ஆம் திகதியிலிருந்து இந்த மொழிப்புலமை அம்சம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஒரு விண்ணப்பதாரி குடியேற விரும்பும் இடத்தின் மொழி அடிப்படையில் அந்த மொழிப் பரீட்சையில் அவர் தேர்ச்சியடைந்த அறிக்கை கிடைக்காத வரையும் அவரது விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுக்கப்படக் கூடாதென்பது அமைச்சரின் பணிப்புக்கமைய கட்டாயமாகியுள்ளது.

மருத்துவப் பரீட்சை, பாதுகாப்புச் சான்றிதழ் ஆகியவைகள் போன்று மொழித் தேர்ச்சியும் கனடாவுக்கு வருவதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டால் மட்டுமே புதிய குடிவரவாளர் கனடா வர அனுமதிக்கப்படுவர்.

ஏற்கனவே கனடாவுக்குள் மாணவராகவோ தொழிலாளராகவோ இருக்கும் வெளிநாட்டவரும் இங்கு நிரந்தரக் குடியுரிமைக்கு விண்ணப்பிப்பதானால், ஆங்கிலம் அல்லது பிரெஞ்ச் மொழித் தேர்வில் சித்தியடைந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

ஆங்கிலத்திலான தேர்வுப் பரீட்சைக்கு the International English language Testing System (IELTS) என்றும், பிரெஞ்சிலான தேர்வுப் பரீட்சைக்கு Test d'e-valuation de francais (TEF) என்றும் பெயர் வைக்கப்பட்டுள்ளது. தேர்வுப்பரீட்சை என்ற புதிய அம்சம் பல்லாயிரக் கணக்கானவர்கள் கனடா வருவதை உடனடியாகத் தடுக்கும் அல்லது தாமதப்படுத்துமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக, தொழிற்துறை அனுபவங்களுடன் மூன்றாம் உலக நாடுகளைச் சார்ந்தவர்களே அதிகளவில் பாதிப்படைவர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான கெடுபிடிச் சட்டத்தை 2008ஆம் ஆண்டிலேயே ஸ்டீபன் ஹாப்பர் அரசாங்கம் கொண்டுவர ஆயத்தங்களை மேற்கொண்டதாயினும், பரவலாகக் கிளம்பிய எதிர்ப்பலையினால் கைவிடப்பட்டது என்று கனடிய சட்டவாளர்கள் சங்கம் (Canadian Bar Association) தெரிவித்துள்ளது.

குடிவரவுச் சட்டத்தில் மாற்றத்தை எற்படுத்தப் போதிய ஆதரவு நாடாளுமன்றத்தில் இல்லாத நிலையில், அமைச்சரின் உத்தரவின் பேரில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதை சட்டவாளர்கள் வன்மையாக எதிர்த்து வருகின்றனர். இதனை எதிர்த்து மனுவொன்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட வகையில் ஒருவருக்கு இவ்வாறான அதிகாரத்தை வழங்குவது, பாதகமான புதிய நடைமுறையொன்றினை ஏற்படுத்த வழிவகுக்கும் என்று சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கனடாவுக்குள் பத்தாண்டுகள் வசிப்பவர்களுக்கும், ஆங்கில மொழி நாட்டினருக்கும் ஆங்கில மொழிப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கும் புதிய மொழித்தேர்ச்சியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் இவர்கள் கோருகின்றனர்.

மொழித் தேர்ச்சி பரீட்சைகளுக்கு உலகின் 130 நாடுகளில் 500 நிலையங்களைக் கனடிய அரசு ஏற்படுத்தியுள்ளது.●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

றொறன்ரோ மின்பாவனையாளர்கள் தமது கட்டணத்தில் 16 வீத அதிகரிப்பை எதிர்பார்க்கலாமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஒன்றிணைந்த வரி (எச். எஸ். ரி) எட்டு வீத அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது. கடும் வெப்பம் காரணமாக குளிர்சாதனங்களின் பாவனை அதிகரிப்பு அடுத்த எட்டு வீத அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது என்று காரணம் கூறப்பட்டுள்ளது. அடுத்து வரப்போகின்ற கட்டணச் சீட்டில் இந்த அதிகரிப்பு காணப்படுமாம்.

கனடாவின் சனத்தொகை இப்போது 34 மில்லியனை எட்டியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் ஐந்தாண்டுக்கு ஒரு முறையான சனத்தொகைக் கணக்கெடுப்பின் மூலம் சரியான தொகை தெரியவரும். வழக்கமாக சனத்தொகை சேகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் நீண்ட பத்திரம் இம்முறை ரத்தானதால் பெரும் சர்ச்சை ஏற்பட்டதன் எதிரொலியாக, சனத்தொகைக் கணக்கெடுப்பு ஆணையாளர் தமது பதவியை ராஜிநாமாச் செய்துள்ளார்.

கடந்த வருடம் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு கப்பலில் வந்த 76 இலங்கை அகதிகளில் விடுதலைப் புலிகள் என்று 25 பேரைக் கனடிய குடிவரவுத் திணைக்களம் சந்தேகித்து தடுத்து வைத்திருந்து விசாரணை மேற்கொண்டு வந்தது. ஆனால் கடந்த மாத முற்பகுதியில், இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இப்போது 76 அகதிகளும் அகதிநிலைக் கோரிக்கை விசாரணையை எதிர்நோக்கியுள்ளனர்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் தமது ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்ளும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்துள்ள இலங்கையர்கள் சேமலாப நிதியைப் பெற வேண்டுமானால் அவர்கள் நேரடியாக இலங்கைக்குச் செல்ல வேண்டுமென சட்டத் திருத்தம் தெரிவிக்கின்றது. இதில் இடம்பெற்ற மோசடிகள் காரணமாகவே திருத்தம் கொண்டு வரப்பட்டதாகவும், இனிமேல் கைவிரல் அடையாளம் பதிவு செய்வது கட்டாயம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் தேசிய கீதமான 'ஓ கனடா' பாடலை இங்குள்ள பாடசாலை மாணவர்கள் போதியளவுக்கு அறிந்திருக்கவில்லை என்று பொதுக்கருத்துக் கணிப்பொன்று கண்டுபிடித்துள்ளது. ஆறு மாகாணங்களின் உயர்நிலைப் பாடசாலைகளிலுள்ள பாடல் குழுக்களைச் சேர்ந்த 275 மாணவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வு இதனை வெளிப்படுத்தியுள்ளது. 67 வீதமான மாணவர்களே தேசிய கீத வரிகளை அறிந்து வைத்துள்ளனர். தேசிய கீதத்தை நன்கு அறிந்தவர்களாக நியுபவுண்லாந்து மாணவர்களும், கடைசி இடத்தில் கியுபெக் மாணவர்களும் உள்ளனர்.

இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் தமிழ் மொழியின் பாவனை அங்குள்ள முதல் பத்து மொழிகளுக்குள் இருப்பதாக லண்டன் பெருநகர காவற்துறையினர் அறிவித்துள்ளனர். இங்கு நாளான்றுக்கு எண்ணாயிரம் அவசர அழைப்புகளும், பன்னிரண்டாயிரம் சாதாரண அழைப்புகளும் தமிழ் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழரே இதற்குக் காரணமென்று கூறப்பட்டுள்ளது. போலந்து, ரோமன், பஞ்சாப், போர்த்துக்கல், ஸ்பெய்ன், துருக்கி, சோமாலி, பிரெஞ்ச் மொழிகளும் முதல் பத்து மொழிகளில் அடங்குகின்றன.

தெனனாபிரிக்காவில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் உலகக் கிண்ண சாம்பியனாக ஸ்பெய்ன் வருமென்று ஜேர்மனியின் கணவாய் (ஒக்டோபஸ்) ஆருடம் கூறிப் பிரபல்யமானது போன்று, அவுஸ்திரேலியாவின் அடுத்த பிரதமராக தொழிற் கட்சியின் ஜுலியாவே மீண்டும் வருவாரென்று அந்நாட்டின் கசன்ட்ரா என்ற கணவாய் ஆருடம் சொல்லியுள்ளது. ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் இந்த மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. கசன்ட்ரா கணவாயின் ஆருடம் பலிக்காது போனால், லிபரல் தலைவர் டோன் அபாட் பிரதமராவார்.

## மதுபோதைச் சாரதிகளுக்கு இந்த மாதத்திலிருந்து கூடிய தண்டனை

வாகன சாரதிகளுக்கான மிகக் கடுமையான தண்டம் வழங்கும் சட்டத்தினை ஒன்ராறியோ மாகாண போக்குவரத்து அமைச்சு இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

புதிய சட்டத்தின் கீழ் 21 வயதுக்குட்பட்ட சாரதிகள் மதுபாவனையின் பின்னர் வாகனம் ஓட்டுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கான மதுபாவனை அளவு பூஜ்யமாக இருக்க வேண்டும். இதனை மீறுபவர்களின் சாரதி அனுமதிப் பத்திரம் முதலில் 24 மணித்தியாலங்களுக்கு இடைநிறுத்தம் செய்யப்படும். அதேசமயம் மதுபாவனையைக் கண்டுபிடித்து வாகன ஓட்டத்தைத் தடுக்கும் (ignition interlock device) சாவியும் பொருத்தக் கூடியதாக சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

இரண்டாம், மூன்றாம் தடவைகள் இதே குற்றத்தில் அகப்படுபவர்களுக்கு படிப்படியாக கூடுதலான தண்டமும், கூடிய கால சாரதி அனுமதித் தடையும் அமுல்செய்யப்படவுள்ளது.

## விபத்து மரணங்கள் இந்தாண்டில் அதிகரிப்பு

போக்குவரத்துச் சட்டங்களில் மிகக் கடுமையான சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ள போதிலும், கடந்த இரண்டாண்டுகளைவிட இந்த ஆண்டில் கூடுதலான விபத்துகளும் மரணங்களும் நிகழ்ந்துள்ளதாக ஒன்ராறியோ மாகாணப் பொலிசார் (OPP) கவலை தெரிவித்துள்ளனர்.

2007ஆம் ஆண்டில் 451 வீதி விபத்து மரணங்கள் இங்கு இடம்பெற்றன. ஆனால் 2008ஆம் ஆண்டில் இது 322 ஆகக் குறைந்தது. 129 மரணங்கள் குறைவாக இடம்பெற்றதால் விபத்து மரணங்கள் 29 வீதத்தால் குறைந்தன. 2009ஆம் ஆண்டில் விபத்துகளால் மரணித்தோர் தொகை 310 ஆகும்.

ஆனால், இந்த ஆண்டு ஜுலை மாதம் 25ஆம் திகதி வரையும் 163 விபத்து மரணங்கள் நிகழ்ந்துள்ளன. 2009ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 154 மரணங்களே நிகழ்ந்தன. இது ஆறு வீத அதிகரிப்பென்று மாகாணப் பொலிசார் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்தாண்டின் 163 விபத்து மரணங்களில் 21 வீதமானவை மதுபானப் பாவனை காரணமானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொசோவா பிரிவினை சரியானது

## சர்வதேச நீதிமன்றம்

செர்பியாவில் இருந்து கொசோவா சுதந்திரம் பெற்றதாக பிரகடனம் செய்தமை சர்வதேச சட்டத்தை மீறும் செயல் அல்ல என்று தி ஹேக்கில் இருக்கின்ற சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மொத்தமான 14 நீதிபதிகளில் 10 பேர் இந்தத் தீர்ப்புக்கு ஆதரவளித்துள்ளனர்.

உலகெங்கும் உள்ள பிரிவினைவாத இயக்கங்களில் இந்த தீர்ப்பு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தத் தீர்ப்பு சட்டரீதியில் கட்டுப்படுத்தாதது, ஆனால், மேலதிக சர்வதேச அங்கீகாரத்துக்கு இது கொசோவோவை ஊக்குவிக்கும்.




செர்பியப் படைகளுக்கும், அல்பேனிய இன பிரிவினைவாதிகளுக்கும் இடையிலான போரை அடுத்து 9 வருடங்களின் பின்னர் கொசோவோவின் அல்பேனிய இன பெரும்பான்மையினர் 2008 இல் சுதந்திர பிரகடனம் செய்தனர்.

பெரும்பாலான மேற்கத்தைய நாடுகள் கொசோவோவை அங்கீகரித்தன. ஆனால், செர்பியாவும் அதன் கூட்டாளியான ரஷ்யாவும் அதனை நிராகரித்தன.

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பானது, சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இரண்டு முக்கிய கேள்விகளுக்கு விடையளித்திருக்கிறது.

ஏற்கெனவே நிறுவப்பட்டு நிலைபெற்றிருக்கும் ஒரு நாட்டில் இருக்கும் ஒரு தொகுதி மக்கள், மொழியின் அடிப்படையிலோ, தேசியஇன அடையாளத்தின் அடிப்படையிலோ தாங்கள் தனித்துவமானவர்கள் என்று கூறி தாங்கள் வாழ்ந்த ஒரு நாட்டிலிருந்து தாமாகவே பிரிந்து செல்வது சரியா என்பது முதல் கேள்வி.

அது சரியென்றால், தற்போதைய நாடுகள் தங்களின் இறையாண்மையையும், தமது ஆட்புல ஒருமைப்பாட்டையும் எப்படி பாதுகாத்துக்கொள்வது.

இந்த இரண்டு கேள்விகளுக்கான பதில்களைத்தான் தீர்ப்பு தெளிவுபடுத்துகிறது.

கொசோவோ பிரிந்தபோது அதை பல நேட்டோ நாடுகள் ஆதரித்திருந்தன. அதன் பிரிவினையானது எதிர்காலத்தில் உலகின் மற்ற பகுதிகளுக்கான முன்னுதாரணமாக ஆகாது என்று அந்த நாடுகள் அப்போது கூறின.

ஆனால் ரஷ்யா இந்த நிலைப்பாட்டை ஏற்கவில்லை. 2008 ஆம் ஆண்டு ரஷ்ய படைகள் ஜியார்ஜியாவுக்குள் சென்றன. இதன் விளைவாக, தென் ஒசெட்டியா மற்றும் அப்காசியா ஆகிய இரண்டு குட்டி நாடுகள் உருவாக வழிபிறந்தது. ஆனால் இந்த இரு நாடுகளையும் இதுவரை வெகுசில நாடுகள் தான் அங்கீகரித்துள்ளன.

இந்தப் பிரச்சினையானது, எந்த ஒரு நாட்டுக்குமே முடிவெடுப்பதற்கு கடினமான ஒன்று. அதிலும் குறிப்பாக, பிரிவினை இயக்கங்களை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு இது ஒரு கடினமான பிரச்சினை.

அந்த காரணத்தால்தான் ஸ்பெயின் நாடானது, மற்ற ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ நாடுகளின் நிலையிலிருந்து விலகி கொசோவோவின் சுதந்திர பிரகடனத்தை ஏற்க முடியாது என்று அறிவித்தது

கள நிலவரத்தில் இந்தத் தீர்ப்பு உடனடியாக பெரிய மாற்றம் எதையும் கொண்டு வரப்போவதில்லை.

செர்பியாவைப் பொறுத்தவரை கொசோவோ மீதான தனது பாத்தியதையை வலியுறுத்துவதைவிட, ஐரோப்பிய ஒன்றியத்துடனான தனது உறவுகளை மேம்படுத்துவது எப்படி என்பது தான் அதன் முக்கிய கவலையாக இருக்கக்கூடும்.

அதேசமயம், கொசோவோவில் இருக்கும் செர்பியர்கள் அதிகம் வாழும் பகுதிகளை கொசோவோவிலிருந்து பிரித்து செர்பியவுடன் இணைக்க வேண்டும் என்கிற கோரிக்கைகளும் எழக்கூடும்.

அதேசமயம், பரந்துபட்ட அளவில் பால்கன் பகுதியிலும், குறிப்பாக போஸ்னியாவிலும், தற்போதைய எல்லைகள் மற்றும் ஏற்பாடுகளின் எதிர்கால நிலைத்த தன்மை குறித்த கேள்விகளை இந்த தீர்ப்பு எழுப்பக்கூடும். ஆனால் அதைப் பற்றி விவாதிப்பதற்கு மேற்குலக ராஜாங்க அதிகாரிகள் யாரும் தயாராக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# நீரிழிவின் முன்நிலை என்றால் என்ன?

நீரிழிவு பற்றி எல்லோரும் அறிவர். ஆனால் நீரிழிவின் முன்நிலை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களோ தெரியாது. நீரிழிவின் முன்நிலை (Prediabetes) என்பது முழுமையான நீரிழிவு தொடங்குவதற்கு முந்திய ஆரம்ப கட்டமாகும்.

குழந்தைகள் பாடசாலைக்குப் போக ஆரம்பிப்பதற்கு முன்னர் 'முன்நிலைப் பள்ளி'க்குப் (Pre School) போகிறார்களே அது போன்றது. ஆரம்பப் பாடசாலை எனவும் சொல்வர். அதே போல 'நீரிழிவின் ஆரம்பநிலை' எனவும் சொல்லலாம்.

இரவு உணவு உட்கொண்டபின் காலை வரை எதுவும் உட்கொள்ளாமல் இரத்தப் பரிசோதனை செய்யும்போது, சீனியின் அளவு (Fasting blood sugar) 110 முதல் 125 வரை இருந்தால் `நீரிழிவின் முன்நிலை' எனலாம். இது 126க்கு மேல் அதிகரிக்குமாயின் அவருக்கு நீரிழிவு எனத் தெளிவாகக் குறிப்பிடலாம்.

மற்றொரு பரிசோதனையும் செய்யப்படுவதுண்டு. இதனை குளுக்கோஸ் ரொலரன்ஸ் டெஸ்ட் (Oral Glucose Tolerance test -OGTT) என்பர்.

50 முதல் 75 கிராம் வரை அளவுள்ள குளுக்கோஸ் கலந்த நீரைக் குடிக்கக் கொடுத்துவிட்டு 2 மணிநேரத்தின் பின் குருதி குளுக்கோஸ் அளவை கணிப்பர்.

இது 140 ற்குக் கீழ் இருந்தால் அவருக்கு நீரிழிவு இல்லை. 140 முதல் 199 வரை இருந்தால் அது நீரிழிவின் முன்நிலை (Prediabetes) ஆகும். 200க்கு மேல் இருந்தால் அவருக்கு நீரிழிவு இருக்கிறது என நிச்சயம் சொல்லலாம்.

### யாருக்குப் பரிசோதனை அவசியம்

உங்களுக்கு வயது 45ற்கு மேல் என்பதுடன் உங்கள் எடையும் அதீதமானது எனில் (Obese) உடனடியாகச் செய்து பார்ப்பது அவசியம். எடை சரியான அளவில் இருந்தால் கூட அடுத்த முறை மருத்துவரிடம் செல்லும்போது இதை எப்பொழுது செய்வது என்பது பற்றிக் கலந்தாலோசியுங்கள்.

இன்று பலரது எடைகளும் அதீதமாக அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக எடை அதீதமாக உள்ளவர்களுக்கு பிரஸர், குருதியில் அதிகரித்த கொலஸடரோல், அதிகரித்த ரைகிளிசரைட் (Triglyceride) அளவு, நல்ல கொலஸ்டரோல் ஆன HDL குறைந்திருப்பது சேர்ந்திருந்தால் 45 வயது எனக் காத்திருக்காது சந்தேகம் ஏற்படும் போது மருத்துவர்கள் செய்யும்படி ஆலோசனை கூறுவர்.

இதைத் தவிர தமது பரம்பரையில் நீரிழிவு உள்ளோர், கர்ப்பமாயிருக்கும்போது நீரிழிவு வந்த பெண்கள் (Gestational Diabetes) கூட அடுத்த முறை மருத்துவரிடம் செல்லும்போது கலந்தாலோசியுங்கள்.

### பழைய பெயர்கள்

முன்பு இதனை Impaired Fasting Glucose என அழைத்தார்கள். அல்லது Impaired Glucose Tolerance என்றும் சொன்னார்கள்.

ஆயினும் மருத்துவப் பின்னணி அல்லது மருத்துவச் சொற்களில் பரிச்சயம் இல்லாதவர்களுக்கும் தெளிவாக அதன் கருத்தைப் புலப்படுத்துவதற்காக புதிய பெயர் கொடுக்கப்பட்டது.

நீரிழிவின் முன்நிலையின் பின் விளைவுகள் நீரிழிவின் முன்நிலையில் இருப்பவர்களுக்கு மாரடைப்பு, பக்கவாதம் போன்ற பாதிப்புகள் வருவதற்கான சாத்தியம் சாதாரண மனிதர்களை விட 1.5 மடங்கு அதிகமாகும். ஆயினும் முழுமையான நீரிழிவு வந்தவர்களுக்கு இது 2 முதல் 4 மடங்குகள் அதிகமாகும். இந்த நிலையில் உள்ளவர்கள் பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தால் நீரிழிவு வராமல் தடுக்கலாம். அல்லது அதுவராமல் நீண்டகாலம் தள்ளிப்போடலாம் என்பது இப்பொழுது ஆய்வுகள் மூலம் தெளிவாகியுள்ளது.

அத்துடன் மேற் கூறிய மாரடைப்பு, பக்கவாதம் போன்ற பாதிப்புகள் ஏற்படும் சாத்தியத்தையும் குறைக்கும். எனவே எப்படித் தடுப்பது உங்களுக்கு நீரிழிவின் முன்நிலை இருக்குமாயின் அது நீரிழிவு நோயாக மாறாமல் தடுப்பதற்கு இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன. வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் குருதியில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்துவது, மருந்துகள் உட்கொள்வதன் மூலம் செய்வது.

வாழ்க்கை முறை மாற்றங்கள் என்பன எவை?

* உணவு முறையில் மாற்றங்கள் செய்தல்,
* எடையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல்.
* அது முடியாது விட்டால் குறைந்தது தமது எடையில் 5 முதல் 10 சதவிகிதம் வரை குறைக்க வேண்டும்.
* தினசரி உடற்பயிற்சி செய்தல். தினசரி முடியாவிட்டால் கிழமையில் 5 நாட்களுக்காவது 30நிமிடம் செய்ய வேண்டும். துரித நடைப் பயிற்சி நல்லதாகும்.

ஆகியனவே அவை. இவற்றை ஒழுங்காகக் கைக்கொண்டால் அவருக்கு நீரிழிவு வருவதற்கான வாய்ப்பு 43 சதவிகிதத்தினால் குறைகிறது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

### மேலதிக நலன்கள்

இதில் முக்கியமான விடயம், வாழ்க்கை முறை மாற்றங்களைக் கடைப்பிடிக்கின்ற காலம் வரைதான் நீரிழிவு வருவதற்கான சாத்தியம் குறையும் என்பதில்லை.

அவற்றைக் கைவிட்ட பின்னரும் கூட அது நீடிக்கிறது.

உதாரணமாக இந்த ஆய்வு ஏழு வருடங்களுக்குச் செய்யப்பட்டது. வாழ்க்கை முறை மாற்றங்களைக் கடைப்பிடித்த அந்த நான்கு வருடங்களுக்கு மட்டுமல்ல அவற்றைக் கைவிட்ட பின்னரும் கூட மேலும் 3

(28ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# முழுநேர பாலர் வகுப்புகள் கேள்வி - பதில் All Day Kg classes

எதிர்வரும் கல்வியாண்டில் 35,000 மாணவர்களுக்கு முழுநேர பாலர் வகுப்பு நிரல் ஒன்ராறியோ மாகாணத்தில் அமுல் நடத்தப்பட வுள்ளது. தற்போது ஒன்ராறியோவில் 240,000 பாலர் வகுப்பு மாணவர்கள் காணப்படுகிறார்கள். படிப்படியாக சகல மாணவர்களுக்கும் இந்நிரல் வழங்கப்படவுள்ளது. பலரின் குழந்தைகள் இந்தப் புதிய நிரலினால் பயன்பெறவுள்ளனர். ஆகவே, பெற்றோர் மத்தியில் இது பற்றிப் பலவிதமான கேள்விகள் தோன்றுவது சகஜம். அவற்றுள் சிலவற்றை இங்கு நீக்குவோம்.

**1. முழுநேர பாலர் வகுப்பு என்றால் என்ன? -** What is Full Day Kg?
4-5 வயதான பாலர் வகுப்புக் குழந்தைகளுக்கு தொடர்ச்சியான முழு நாள் வகுப்பாகும். இதில் சாதாரண பாடசாலை நிரலைக் கொண்ட முழுநேர பாடசாலை நிரலையும், பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னும் பாடசாலை முடிந்த பின்பும் மேலதிக நிரல்களை வழங்கவுள்ளனர். பாடசாலைக்கு முன்பும் பின்பும் நடைபெறும் நிரல்கள் கட்டாய-மானவையல்ல. பெற்றோர் விரும்புமிடத்து இவற்றுக்குக் குழந்தைகளை அனுப்பலாம். அதற்காக ஒரு சிறு கட்டணம் அறவிடப்படும். ஆகவே, வருவாய் குறைந்த பெற்றோர் கட்டணம் பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை.

**2. எனது பிள்ளையின் கற்றலுக்கு யார் உதவி வழங்குவார்கள்?**
- Who will support my child's learning?
பாடசாலை நேரத்தில் கீழ்ப்பிரிவு பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்கான விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் தகைமைகள் உள்ளவர்களால் பாடபோதனை நடத்தப்படும். இவர்களுடன் சேர்ந்து சிறுபிள்ளைகளின் போதனையாளர் எனப்படும் உதவியாளர்களும் (Early childhood Educators - ECE) தொழிற்படுவார்கள். இரண்டு ஆசிரியர்கள் ஒரே நேரத்தில் போதனை நடத்துவதால் பிள்ளைகள் பாரிய நன்மைகளைப் பெறுவதற்கு வாய்ப்புண்டு. ஒவ்வொரு பிள்ளையினதும் தனிப்பட்ட திறமைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப திட்டமிட்ட ஒரு நிரலை வழங்குவார்கள். ஒவ்வொரு பிள்ளைக்கும் தனிப்பட்ட மேற்பார்வையும், கற்றல் வசதிகளும் கிடைக்கும். பாடசாலை தொடங்குவதற்கு முன்பும், பாடசாலை விட்ட பின்பும் ECE ஆசிரியர்களே கற்பிப்பார்கள். இதனால் ஒரு தொடர்ச்சியான நிரலை வழங்க முடியும்.

**3. முழு நேர வகுப்புகளால் எனது பிள்ளை எவ்வாறு பயனடைவார்? -** How will my child benefit?
* பாடசாலைக்கு ஒரு ஸ்திரமான ஆரம்பம் ஏற்படுகிறது (a stronger start in school). முழுநாள் கற்றல் மூலம் ஒரு மாணவனின் வாசிப்பு, எழுத்து, கணிதம் ஆகிய திறன்களுக்கு நல்லதொரு அத்திவாரம் இடப்படுகிறது. முதலாம் வகுப்புக்குச் செல்லும்போது ஏற்படும் மாற்றத்தை பெற்றோராலும் பிள்ளைகளாலும் சுலபமாகக் கையாள முடிகிறது. பாடசாலைக்கான ஆரம்பம் சந்தோஷமான ஆரம்பமாக அமையுமிடத்து, பிள்ளைகளுக்குக் கற்றலில் ஆர்வமும், பாடசாலை அனுபவங்களில் ஒரு பங்காளியாகச் செயற்படும் மனப்பக்குவமும் ஏற்படும்.

* சக மாணவர்களோடு அதிக நேரம் செலவிட முடிகிறது (more time with classmates). வழமையான பாடசாலை நேரத்தில் மாணவன் தனது சக மாணவர்களோடு பழகுவதன் மூலம் தமது சமூகத் திறன்களையும், கல்வி அடைவுகளையும் விருத்தி செய்ய முடிகிறது. பாடசாலைக்கு முன்பும், பாட-சாலை விட்ட பின்பும் நாளாந்தம் நடைபெறும் நிரல்கள் பாடசாலை நேரத்தில் அவர் கற்ற விடயங்களை அடையச் செய்கின்றன.

* பிரிவில்லாத ஒரு தொடர்ச்சியான, ஒன்றிணைந்த பாடசாலை நாள் (A seam-less and integrated day).
மாணவன் தனக்குப் பரிச்சயமான ஒரு சூழலில், தமக்குப் பழக்கமான ஆசிரியர்களோடும் சக மாணவர்களோடும் கல்வி கற்க முடியும். பாடசாலை தொடங்குவதற்கு முன்பும் பின்பும் இற்றைக்காலம் வரை பிள்ளைகள் வேறு இடங்களில் வழங்கப்பட்ட பிள்ளை பராமரிப்பு நிலையங்களுக்கே செல்ல வேண்டியிருந்தது. ஒரே பாடசாலையில் இவையிரண்டும் வழங்கப்படும்போது இடத்துக்கிடம் மாறும் பிரச்சனை தீர்த்து வைக்கப்படுகிறது. இதனால், பிள்ளைகளுக்கு அலைச்சலும் கஷ்டங்களும் ஏற்படாமலிருக்கிறது.

**4. வழமையான பாடசாலை நாளில் மாணவர்கள் என்ன கற்பார்கள்? -** What will my child learn and do during the regular school day?
கற்றலுக்கும் விளையாட்டுக்குமிடையே பாரிய தொடர்பு இருப்பதாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. பிரச்சனைகளைத் தீர்த்தல், மொழி - எண்திறன்கள் - உடல் உளத்திறன்கள் (problem solving, language and number skills, physical and emotional skills) யாவற்றிலும் கற்றலுக்கும் விளையாட்டுக்கும் தொடர்பு உண்டு. மாணவர்கள் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதோடு ஆராய்ந்து விசாரணை செய்து பிரச்சனைகளைத் தீர்க்கப் பாடுபடுவார்கள். தங்கள் கற்றலையும் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் பழகுகிறார்கள்.

இந்நிரலில் ஈடுபடப்போகும் ஆசிரியர்களுக்கும் சிறுபிள்ளைப் போதனையாளர்களுக்கும் ஒரு புதிய கலைத்திட்டம் வழங்கப்படுகின்றது. இக்கலைத் திட்டம் பிள்ளைகளின் சமூக, உள, உடல், கல்வித் திறன்களை விருத்தி செய்வதோடு பாடசாலையிலும், வாழ்க்கையிலும் வெற்றியீட்டுவதற்கான அத்திவாரத்தை வழங்குகிறது.

**5. பாடசாலைக்கு முன்பும் பின்பும் பிள்ளைகள் என்ன செய்வார்கள்? -** What will my child learn and do before and after school?
பாடசாலை நிரலுக்குத் தொடர்ச்சியாகவே இந்நிரல்களும் அமைகின்றன. ஆகவே, பாடசாலை நேரத்தில் கற்றவர்களுக்கு உதவும் வகையிலேயே இந்நிரல்களும் அமையப் போகின்றன. ECE ஆசிரியர்களின் மேற்பார்வையில் மாணவர்கள் அமைதியாக வாசித்தல், விளையாட்டு மண்டபம் (gym) மற்றும் வெளியிலும் விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள். இவை கட்டாய-மானவையல்ல. சிறிதளவு கட்டணம் →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் மீன் பிரியரா?
# சரியான மீனைத் தெரிவது நல்லது

சுவையான உணவு வகைகளில் ஒன்று மீன். கடல்வாழ் இனங்களில் மீனுக்குத் தனியான இடமுண்டு.

குழம்பாகவும், பொரியலாகவும், சம்பலாகவும் மட்டுமன்று சிலசமயம் மரக்கறி வகைகளுடனும் இதனைச் சேர்த்து எம்மவர் சமைப்பதுண்டு.

கனடா உணவு வழிகாட்டியானது, மீன் உணவு பற்றிய பல விபரங்களைத் தந்துள்ளது. இதன்படி, ஒருவருக்குரிய மீனின் அளவு 75 கிறாம் அல்லது 2.5 அவுன்சு அல்லது பருமட்டாக அரைக் கிண்ணம் என்று தெரிவிக்கின்றது. இதில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்களைக் கேள்வி - பதில் வடிவில் கீழே படிக்கலாம்.

**மீன் எனக்கு நல்லதா?**

ஆம். மீன் புரதச்சத்தும், மற்றும் பல ஊட்டச்சத்துகளும் மிகுந்த மிகச்சிறந்த உணவு. Omega-3 கொழுப்பு வகைகள், DHA, EPA என்பவற்றையும் அது கொண்டுள்ளது. குழந்தை பிறக்க முன்னரும், பிறந்த பின்னரும் அதன் மூளை, விழிகள், நரம்புகள் விருத்தி அடைவதற்கு DHA உதவும். கருவுற்ற அல்லது தாய்ப்பாலூட்டும் அல்லது கருத்தரிக்கக்கூடிய பெண்கள் DHA ஈட்டுவதற்கு மீன் உண்ண வேண்டும். EPA என்பது இதய நோயைத் தடுக்க உதவும் omega-3 கொழுப்பாகும்.

**மீன் உண்பதால் கெடுதிகள் விளைய வாய்ப்புள்ளதா?**

ஆம். மீனில் பாதரசம் இருக்கக்கூடும். நீண்டகாலம் வாழ்ந்து, பிற மீன்களை உண்ணும் பெரிய மீன்கள் மிகுந்த பாதரசம் கொண்டவை. மீன்களின் இழையங்களில் பாதரசம் படிந்துள்ளது. அம்மீன்களை நாங்கள் உண்ணும்பொழுது அந்த பாதரசம் எங்கள் உடலில் படிகிறது.

கருவுற்ற அல்லது தாய்ப்பாலூட்டும் அல்லது கருத்தரிக்கக்கூடிய பெண்கள் பாதரசம் மிகுந்த மீன்வகைகளைத் தவிர்க்க வேண்டும் அல்லது அரிதாகவே உண்ண வேண்டும். பிறக்க முன்னரும் பிறந்த பின்னரும் மிகுந்த பாதரசத்தின் தாக்கத்துக்கு உள்ளாகும் குழந்தைகளுக்கு கற்பதிலும், நடப்பதிலும், கதைப்பதிலும் பிரச்சனைகள் ஏற்படலாம்.

**நான் மீன் வகைகளை நம்பி உண்ணலாமா?**

கருவுற்ற அல்லது தாய்ப்பாலூட்டும் அல்லது கருத்தரிக்கக்கூடிய பெண்கள் பல்வேறு மீனின வகைகளைக் கவனமாகத் தேர்ந்து உண்டு மகிழலாம். உங்கள் பிள்ளைகளுக்கும் பாதரசம் மிகுந்த மீன்வகைகளைத் தவிர்த்து ஊட்டலாம். அல்லது அரிதாக ஊட்டலாம். இந்த வழிகாட்டியைப் பயன்படுத்தி, உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் உகந்த மீன்வகைகளைத் தெரிவுசெய்யவும்.

**பேணியிலடைத்த சூரை (tuna) மீன் எப்படி?**
பேணியிலடைத்த சூரை மீன்களுள் வெவ்வேறு வகைகள் உள்ளன. விபர நறுக்கை வாசித்து, பாதரசம் குறைந்த "மென்" சூரை வகையைத் தெரிவு செய்யவும். "வெள்ளை" அல்லது சிறகு நீண்ட சூரை (Albacore tuna) வகையைக் குறைக்கவும்.

**வஞ்சிர (salmon) மீன் எப்படி?**
வஞ்சிரம் omega-3 கொழுப்பு மிகுந்த, பாதரசம் குறைந்த மீன். எனினும் சில குறைகள் உள்ளன:

(33ஆம் பக்கம் வருக)

செலுத்தப்பட வேண்டும். அதுவும் வருமானத்தின் அடிப்படையிலேயே அறவிடப்படும். பாடசாலை அதிபரிடமோ, அல்லது கல்விச் சபைகளிடமோ விபரங்களைக் கேட்டறியலாம்.

**6. கற்றல் முறைகளை வகைப்படுத்தவும்** - Examples of classroom activities.

* **விசாரணை முறை** (investigation):
**உதாரணம் - மாணவர்கள் சிறு கப்பல்களைச் செய்யும்படி கேட்கப்படுவார்கள். இக்கப்பல்களைத் தண்ணீரில் ஒவ்வொன்றாக விடுவார்கள். கப்பலில் சிறு கற்களை ஒவ்வொன்றாகப் போடுவார்கள். ஒருவர் கற்களைப் போடும்போது, கணக்கு வைக்குமாறு வேறொரு பிள்ளை கேட்கப்படுவார். எத்தனையாவது கல்லை வைக்கும்போது கப்பல் தண்ணீரில் கவிழ்ந்தது என்று ஆசிரியர் கேட்பார். கப்பலுக்குக் கப்பல் இந்த எண்ணிக்கை வேறுபடலாம். இது எதனால் நடந்தது என மாணவர் தமது சிந்தனா சக்திக்கு ஏற்ப அறிய ஆராய்வர்.**

* **ஆக்கபூர்வமாகச் சிந்தித்தல்** - Creative thinking.
**உதாரணம்: பிள்ளைகள் சிறு குழுக்களாக ஒரு கோபுரத்தைத் தங்கள் உயரமளவுக்குக் கட்டுவார்கள். கோபுரம் விழாமலிருக்க வேண்டுமானால் அடித்தளம் அகலமாக அமைய வேண்டும் என்பதை அடித்தளம் மூலம் அறிவார்கள். பின்பு கோபுரத்துக்கு பெயர் முதலிய விபரங்களை எழுதி ஒட்டுவார்கள்.**

* **அவதானித்தல்** - Observing.
**பறவைகள் உணவு உண்பதற்கான அட்டைப் பெட்டிகளைப் பிள்ளைகள் தயாரிப்பார்கள். பின்னர் இவற்றை வகுப்புக்கு வெளியே தொங்க விடுவார்கள். ஆசிரியரின் உதவியுடன் பறவைகள் உணவை உண்டனவா என்பதை அவதானித்து குறிப்பு எடுப்பார்கள்.**

**காலை ஏழு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்கு ஒரு பூரணமான நிரலை 400 மில்லியன் டாலர் செலவில் டால்ரன் மக்கன்ரி அரசு வழங்க முன்வந்துள்ளது. இதன் வெற்றி தோல்வியைப் பல வருட காலத்தின் பின்னர்தான் அளவிட முடியும். ஆகவே, இருநிரலில் பெற்றோரின் பங்களிப்பு** (parental involvement) **மிகவும் முக்கியம் எனக் கருதப்படுகிறது.●**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# சமயோசிதம்

சமயோசிதம் என்றால் உடனுக்குடன் ஒன்றை யோசித்துச் செய்வது, அல்லது சொல்வது. வின்ஸ்டன் சேர்ச்சில் அதில் கெட்டிக்காரர் என்று சொல்வார்கள். அவருடைய புகழ் உச்சத்தில் இருந்த சமயம் ஒரு பெண் அவரிடம் வந்து 'வின்ஸ்டன், உங்களிடம் எனக்கு பிடிக்காதது இரண்டு விசயம்தான்.

உங்களுடைய மீசை மற்றது உங்கள் அரசியல்' என்றார். அதற்கு சேர்ச்சில் 'அம்மணி, விசனம் வேண்டாம். இரண்டுக்கும் அருகாமையில் வரும் வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கப் போவதில்லை' என்றார்.

சமயோசிதமாக ஒன்றைச் சொல்வதில் ஆங்கில எழுத்தாளரான ஒஸ்கார் வைல்டும் பெயர் பெற்றவர். அவரிடம் ஒருமுறை கேட்டார்கள்.

'பத்திரிகைக்காரருக்கும் எழுத்தாளருக்கும் இடையில் என்ன வித்தியாசம்?''. அவர் இப்படி பதில் சொன்னார்' 'பத்திரிகைக்காரர் எழுதுவதை ஒருவரும் படிக்க முடியாது. எழுத்தாளர் எழுதுவதை ஒருவரும் படிப்பதில்லை.'

இடி அமின் உகண்டாவின் அதிபராக இருந்த காலத்தில் அவருடைய அமைச்சர்கள் எல்லாம் நடுங்கிக்கொண்டே இருப்பார்கள். தினமும் ஏதாவது ஒன்றைப் புதிதாக யோசித்து அமைச்சர்களுக்கு தொல்லை கொடுப்பதுதான் அவர் வேலை.

அமைச்சர்கள் அவர் கட்டளைகளை நிறவேற்றாவிட்டால் அவர்களை அமைச்சரவையிலிருந்து நீக்கி விடுவார், அல்லது நாட்டிலிருந்து நீக்கி விடுவார். சிலவேளை உலகத்திலிருந்தே நீக்கி விடுவார்.

அதிலும் வெளிவிவகார அமைச்சர்பாடு திண்டாட்டம்தான். தினமும் ஏதாவது புதிதாக யோசித்து அவருக்கு இம்சை கொடுப்பார். ஒருநாள் அதிகாலை அமைச்சரை அழைத்து 'உகண்டா என்ற பெயர் நல்லாயில்லை. அதை 'இடி' என்று மாற்றவேண்டும். என்னுடைய பெயர் 'இடி அமின்' என இருப்பதால் அதுதான் பொருத்தமானது. உடனே அதற்கான ஆயத்தங்களை செய்யுங்கள்' என்று ஆணை பிறப்பித்தார்.

அமைச்சர் நடுங்கிவிட்டார். சரி என்று சொன்னவர் ஒன்றுமே செய்யாமல் சும்மா இருந்தார். இரண்டு வாரம் போனது. இடி அமின் கோபத்தில் இருந்தார். அமைச்சரை அழைத்து 'என்ன செய்கிறீர்? நாட்டின் பெயரை மாற்றிவிட்டீரா?' என்று கேட்டார். அமைச்சர் அமைதியாகச் சொன்னார். 'நான் பலநாட்டு பிரதிநிதிகளையும் தொடர்புகொண்டு அவர்கள் அபிப்பிராயத்தை கேட்டேன். அவர்கள் எல்லோருமே அருமையான யோசனை, இதைவிடப் பொருத்தமான வேறு பெயர் கிடைக்காது என்று சொன்னார்கள். ஆனால் ஒரேயொரு சின்னப் பிரச்சினை' என்றார்.

இடி அமின் 'என்ன என்ன, என்ன சின்னப் பிரச்சினை?' என்று அவசரப்பட்டார். அமைச்சர் சொன்னார், 'சைப்பிரஸ் என்று ஒரு நாடு இருக்கிறது. அந்த நாட்டு மக்களை 'சைப்பிரியட்' என்று அழைப்பார்கள். எங்கள் நாட்டு பெயரை இடி என்று மாற்றினால் நாட்டு மக்களை இடியட்' என்று அழைக்கவேண்டி வரும். பரவாயில்லையா?'. யோசனை கைவிடப்பட்டது.

ஆனால் சமயோசிதத்தில் அமெரிக்காவில் ஒரு 16 வயதுப் பையன் இவர்கள் எல்லோரையும் வென்றவனாக இருக்கிறான். அவன் ஒரு சுப்பர் மார்க்கட்டில் தற்காலிக வேலைக்கு சேர்ந்தான். ஒருநாள் ஒரு கிழவர் வந்து தனக்கு அரை றாத்தல் வெண்ணெய்கட்டி வேண்டும் என்றார். பையன் 'அரை றாத்தல் கிடையாது. ஒரு றாத்தல் கட்டிகள்தான் இருக்கின்றன' என்றான். கிழவர் சண்டை பிடிக்கத் தொடங்கினார். 'எனக்கு வேண்டியது அரை றாத்தல்தான்.

நான் ஏன் ஒரு றாத்தல் வாங்கவேண்டும். மீதியை நான் என்ன செய்வது? இது பெரிய அநியாயமாக இருக்கிறது' என்று கத்தினார். பையன் சரி 'மனேஜரிடம் கேட்டு வருகிறேன்' என்று உள்ளே போய் மனேஜரிடம் 'சேர், ஒரு முட்டாள் தனக்கு அரை றாத்தல் வெண்ணெய்கட்டி வேண்டும் என்று அடம் பிடிக்கிறான்' என்றுவிட்டு திரும்பி பார்த்தால் கிழவர் அங்கே நிற்கிறார்.

உடனே பேச்சை மாற்றி 'ஆனால் இந்த அருமையான மனிதர் மற்ற பாதியை தான் வாங்குவதாகச் சொல்கிறார்' என்றான். மனேஜர் கிழவருக்கு முழு வெண்ணெய்கட்டியை பாதி விலைக்கு கொடுத்து அனுப்பிவிட்டு பையனிடம் 'உன்னை எனக்கு பிடித்துக்கொண்டது. நீ புத்திசாலியாக இருக்கிறாய். நீ எந்த நாட்டைச் சேர்ந்தவன்?' என்று கேட்டார்.

பையன் 'சேர், நான் மெக்ஸிக்கோவைச் சேர்ந்தவன். அது ஒரு மோசமான நாடு. அந்த நாடு நிறைய கால் பந்தாட்டக்காரர்களும், விலைமாதுகளும்தான்' என்றான்.
மனேஜர் 'அப்படியா? என் மனைவிகூட மெக்ஸிக்கோகாரிதான்' என்றார். பையன் 'பாருங்கள், என்ன அதிர்ஷ்டம்? உங்கள் மனைவி எந்த உதைபந்தாட்ட அணியில் விளையாடுகிறார்?' என்றான்.

பையனுக்கு உடனேயே உதவி மனேஜர் பதவி கிடைத்தது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன்

# தாலி

இந்து திருமணங்களிலும், இந்திய தொலைக் காட்சிகளிலும் தாலி கட்டும் பொழுது குருக்கள் ஐயா அர்த்தத்துடன் உச்சரிக்கும் மந்திரத்தின் விளக்கம் என்ன?

மாங்கல்யம் தந்துநாநேந மமஜீவன ஹேதுநா
கண்டே பத்தாமி ஸுபகே ஸஞ்ஜீவ சரதசதம்....

பாக்கியவதியே' நான் சிரஞ்சீவியாக இருப்பதற்கு காரணமாக இந்த மாங்கல்யத்தை உன் கழுத்தில் கட்டுகின்றேன். நீயும் நூறாண்டு வாழ்வாயாக என்பதாகும்.

நெற்றிப்பட்டம், சூளாமணி, சடை நாகம், தோடு, தொங்கட்டான், மூக்குத்தி, சங்கிலி, அட்டியல்,பதக்கம், வளை, காப்பு, மோதிரம், ஒட்டியாணம், மேகலை, விரிசிகை, காற்சங்கிலி போன்ற அனைத்து தங்க நகைகளுடனும் சீதனமாக மணவறைக்கு அசைந்துவரும் மணமகள், தாலியை மட்டும் முதுசொமாக மணவறையில் சூட்டப்பெற்று வாழ்க்கை முழுவதற்கும் தனக்கே உரியதென்னும் கம்பீரத்துடன் சுமங்கலியாக அழகு மிளிர வாழும்வரை வாழ்கின்றாள்.

பிள்ளையார் தாலி, கொம்புத்தாலி, அம்மன் தாலி, பிறைத்தாலி, தொப்பைத்தாலி, பட்டைத்தாலி, சிறகுத் தாலி, சிலுவைத்தாலி, கிண்ணிபொட்டுத்தாலி, கலாசாரத்தாலி, கருகமணித்தாலி, நாமத்தாலி, அன்னம் தாலி, துளசிமாடம் என தாலியில் பலவகை இல்லத்தரசிகளின் இலக்கணமாகின்றன.

இந்தியாவில் இவை அனைத்தும் மத-குலவழக்கிற்கமைய பாவனையிலிருக்க. ஈழமக்களின் வாழ்வுடன் வருவது பிள்ளையார் தாலி அல்லது கொம்புத்தாலி அல்லது அம்மன்தாலி மட்டுமே.

கிறிஸ்தவருக்கு சிலுவைத் தாலியும் பிறைத் தாலியும் - இஸ்லாமியருக்கு பிறைத் தாலியும், கருகமணித் தாலியும் -வைஷ்ணவருக்கு நாமத் தாலியும் துளசி மாடத் தாலியும் நெஞ்சுக்கு நெருக்கம்.

சகல வகைத் தாலிகளும் சாஸ்திர, சம்பிரதாயங்களுக்கு ஏற்ப வெவ்வேறு வடிவம் பெறும்.

மாங்கல்யம், மங்கல நாண், மங்கல அணி, சுத்தரி, சுந்துரு போன்றன தாலிக்கு வேறு பெயர்கள்.

கி.பி.10ம் நூற்றாண்டின் பின்பே தாலி கட்டும் நாகரிகம் மகளிர் கழுத்தை வருட ஆரம்பித்தது.

தாலம் பனை ஓலைகள் அநாதியில் பயன்படுத்தப்பட்டு தாலி என்ற பெயர் பெற்றது. நீடித்த பாவனை கருதி உலோகத்தினாலும், பெறுமதி காட்டிட பொன்னாலும் பின்பு மாற்றமடைந்தது.

புலிப்பல் தாலியும், புலிநகத்தாலியும் பண்டைய மக்களின் வீரதீரத்தை நெஞ்சில் நிரப்பின.

சிறாரின் காவல் கருதி பெற்றோரால் அணிவிக்கப்பட்டது ஐம்படைத்தாலி எனப்பட்டது. திருமணத்திற்கும் இந்தத்தாலிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

தாலி என்பது மஞ்சள் பொருள் கட்டிய கயிறு என்பது தொல் அடையாளங்களி லொன்று. விரலி மஞ்சளை இன்னமும் நெஞ்சில் சுமக்கின்றனர் அதன் இன்றைய பிரதிநிதிகள்.

தோஷ பரிகாரமாக வேம்பு, வாழை, கழுதை, நாய் போன்றவற்றிக்கு தாலிகட்டுவர் அற்ப சந்தோஷிகள்.

கிழாரியத்தின் (feudalism), அல்லது ஆணாதிக்கத்தின் (male chauvanism) சின்னமே தாலிச்சரடு என தாலி அணிந்தபடியே சில ஏறுகள், ஏறுமாறாக சரடுவிடுவது மூச்சு முட்டும் ஒரு போராட்டம்.

ஏழு அல்லது ஒன்பது அல்லது பதினொரு பவுனில் 22 கரட் தங்கத்தில் தாலிகட்டும் வழமைமீறி 100 பவுனில் தாலிகட்டினான் ஒரு தமிழன். நாகரிகம் கட்டிலின் உயரத்துக்காவது எகிறியிருக்குமா?

150 நடிகைகளுக்கு நடிப்புக்காக தாலி கட்டினார் நடிகர் சிவகுமார் என்று 'கின்னஸ்' கூறும்.

தாலி பற்றிய விபரமான தகவல்கள் எதனையும் காட்டுவதற்கு சங்க இலக்கியங்கள் எவையுமே கழுத்தை நீட்டவில்லை. அவற்றில் மிகக் குறுகிய அளவில் மட்டுமே உவமானமாக காட்டப்பட்டுள்ளது.

அந்த வகையில் சிலப்பதிகாரம் தான் தாலி கட்டிக்கொண்ட முதல் இலக்கியமாகின்றது.

ஓவ்வொரு தமிழ்ப் பெண்ணின் வாழ்விலும் வளமான பங்கு வகிப்பதும் மிக உயர்ந்த மங்களப் பொருளாக மகிமை பெறுவதும் தாலியே என போற்றுவோர் - பெரியோர்'

பல நூறு வகையான தங்க ஆபரணங்கள் இருந்தாலும் சுமங்கலி கண்ணில் ஒற்றி வணங்கும் தாலிதான் மகத்துவம் மிக்க வாழ்வின் ஆபரணம் என வாழ்த்துவோர் - நல்லோர்' ●

## ஓய்வுக்கான சேமிப்பு

**ஓய்வு காலத்திற்கான சேமிப்பான ரிரிசிபி இல் பணம் சேமிப்பதை தள்ளிப் போடுவதிலும் பார்க்க, இளம் வயதிலி ருந்தே கொஞ்சம் கொஞ்சமாக சேமித்து வருவது கூடிய பயனளிக்கும்.**

**மாதா மாதம் வங்கிக் கணக்கிலிருந்து ரிரிசிபி கணக்கிற்கு குறிப்பிட்ட ஒரு தொகையை போடுவதற்கு வங்கிக் கணக்கில் ஒழுங்கு செய்தல் வருங்காலச் சேமிப்பிற்கு பெரிதும் உதவி புரியும் ஒரு வழியாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட்

# டெஸ்ட் ஆட்டத்தில் 800 விக்கட்டுகள் உலக சாதனையுடன் முரளிதரன் ஓய்வு



**இலங்கை கிரிக்கெட் அணியின் முதல்தர சுழற் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் (38 வயது), 800வது விக்கட்டை வீழ்த்திய உலக சாதனையை நிகழ்த்திவிட்டு, கடந்த மாதம் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் மலைநாட்டின் கண்டியைச் சேர்ந்தவர்.**

**தென்னிலங்கையிலுள்ள காலி என்ற இடத்தில் இந்திய அணியுடன் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் எட்டு விக்கட்டுகளை வீழ்த்தி, மொத்தம் 800 விக்கட்டுகள் சாதனையை நிலைநாட்டினார். பந்து வீச்சில் ஆஸ்திரேலிய வீரரான ஷேர்ன் வார்ன் முன்னர் ஏற்படுத்தியிருந்த உலக சாதனை இதனால் முறியடிக்கப்பட்டது.**

**டெஸ்ட் ஆட்டத்தில் முதலில் 1992ஆம் ஆண்டில் இதே காலி மைதானத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் முரளிதரன் கால் பதித்தார். இதுவரை 134 டெஸ்ட் போட்டிகளில் இவர் விளையாடியுள்ளார்.**

**இங்கிலாந்துக்கு எதிராக 16 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய இவர் 112 விக்கட்டுகளையும், இந்தியாவுக்கு எதிரான 22 டெஸ்ட் ஆட்டங்களில் 105 விக்கட்டு களையும், தென்னாபிரிக்காவுடனான 15 டெஸ்ட் ஆட்டங்களில் 104 விக்கட்டு-களையும் வீழ்த்தியுள்ளார்.**

**டெஸ்ட் போட்டிகளுக்கு அப்பால், 337 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 329 இன்னிங்சுகளில் விளையாடிய முரளிதரன், இவைகளில் 515 விக்கட்டுகளைக் கைப்பற்றியுள்ளார.**

**133 டெஸ்ட் ஆட்டங்களில் 164 இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இவர், 161 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்றுள்ளார். ஒரு ஆட்டத்தில் இவர் ஆகக்கூடியதாக 63 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.**



பொன்னையா விவேகானந்தன்

# தீம்புளிப்பாகர் 6

செய்வது அறியாது கலங்கி நிற்கின்றாள் ஒரு தாய். அப்பக்கமாய் வந்த அவளின் தோழி கலக்கத்தின் காரணத்தைக் கேட்கின்றாள்.

உனக்குத் தெரியாதா? சில நாட்களின் முன்னர், என் மகள் விரும்பிய ஒருவனைக் கரம் பிடித்து தனிக்குடித்தனம் போயிருக்கின்றாளே' அதை நினைத்துத்தான் கலக்கமுற்றிருக்கின்றேன்.

எல்லோருமாகத்தானே அவளை வழியனுப்பி வைத்தோம். அதற்கு ஏன் கலங்குகின்றாய்?

எப்படிக் கலங்காமல் இருக்க முடியும்? விளையாட்டுப்பிள்ளையவள். சிறு துரும்பு தூக்கிப் போட மாட்டாள். எப்படி தனிக்குடித்தனம் நடத்துவாள்? இளமானாகத் துள்ளித் திரிந்தவள் துவண்டு போவாளே? பெற்ற மனம் எப்படி தவிக்காது இருக்கும்?

சரிதான், கலங்காதே, நான் சென்று அவள் என்ன செய்கின்றாள் என்பதைப் பார்த்து வருகின்றேன். மகள் வாழும் இடம் நோக்கிச் செல்கின்றாள் தாயின் தோழி.

ஓலையால் வேயப்பட்ட அழகிய சிறு வீடு. சிறு துவாரம் வழியாக உள்ளே நோட்டம் விடுகின்றாள் அன்னையின் தோழி. வீட்டுக்குள்ளே ஒரு அதிசயத்தை நிகழ்த்திக் கொண்டிருந்தாள் அந்தச் சிறுபெண்.

தன்னுடைய மென்மையான விரல்களால் தெரிந்தெடுக்கப்பட்ட முற்றிய தயிரை பிசைகின்றாள். கட்டித்தன்மை எதுவுமே இல்லாமல் தயிர் முழுமையாகக் கரைகின்றது. கண்ணும் கருத்துமாக அவள் தயிரைப் பிசைந்துகொண்டிருக்க, புதிதாகக் கட்டிய பட்டுச்சேலையின் முந்தானை நழுவிக் கீழே சரிகின்றது. பெறுமதி மிக்க பட்டுசேலை, தயிர்க் கையோடு தொட்டுச் சரி செய்யலாமா? சேலை அழுக்காகிவிடுமே. கையைக் கழுவி சேலையையைச் சரி செய்து பின் தயிரில் கை வைத்தால் தயிரின் சுவை மாறிவிடுமே? என்ன செய்யலாம்?

இவளுக்கு, கணவனுக்காக ஆக்கப்படும் உணவின் சுவைதான் முக்கியம். சேலைதான் அழுக்காகின்றது. தயிரை நேர்த்தியாக பிசைந்தாயிற்று. அடுத்து தாளிக்க வேண்டும். அடுப்பில் சட்டியை வைத்து தயிரைத் தாளிதம் செய்கின்றாள். புகை கிளம்புகின்றது. புகை புகுந்த விழிகள் எரிச்சல் தருகின்றன. மேற்கையால் கண்களைக் கசக்கியபடி தாளிதத்திலேயே ஆழக் கவனமாக இருக்கின்றாள். சற்றே கூடிக்குறைந்தாலும் சுவை கெட்டுவிடும்.

ஒரு வழியாக, கணவனுக்கான தீம்புளிப்பாகரை ஆக்கி விடுகின்றாள்.

தயிர்பட்டு அழுக்காகிய சேலை, புகை தொட்டு கரைந்த விழிகள், உடலெங்கும் கரும் புகையின் படிவுகள். ஆயினும் என்ன? கணவனுக்குரிய உணவின் குறைவுபடாத சுவை மட்டுமே அவள் உணர்வுகளுக்குத் தெரிந்திருந்தது.

தன் பணி முடித்துத் திரும்புகின்றான் கணவன். அவன் வருகைக்காகக் காத்திருந்த இவள் வரவேற்று, களைப்பகற்றி உணவளிக்கின்றாள். அவள் ஆக்கிய அந்த உணவை உண்ணும் போது, 'ஆகா என்ன சுவை' எனப் புகழ்கின்றான் கணவன். அதைக் கேட்க, அவள் முகமெங்கும் நுண்மையான மகிழ்வின் ரேகைகள் படர்ந்தெங்கும் ஓடின.

நான் காண்பதெல்லாம் கனவா? இல்லை, விழி முன் நிகழும் அதிசயமா? இவளா இப்படி?

தமிழர் குடும்ப வாழ்வியலில் நிகழும் இயல்பை உணர்ந்து பெருமை சுமந்து தாயின் இடம் நோக்கித் திரும்பினாள் தோழி,

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழக்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே. (குறுந்தொகை 167) ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## வின்ஸ்டன் சேர்ச்சிலின் சுருட்டு காணாமற் போனது எப்படி?

மகாத்மா காந்தி என்றால் கம்பி மூக்குக் கண்ணாடி, ஹிட்லர் என்றால் நறுக்கு மீசை என்பது போல வின்ஸ்டன் சேர்ச்சில் என்றால் அந்த சுருட்டுத்தான் கண் முன்னால் வரும். அதுவும் வாயின் இடதுபக்க மூலையில் அந்தச் சுருட்டு எப்போதும் காணப்படும்.

என்ன எரிச்சலோ பொறாமையோ, யாரோ ஒருவர் திட்டமிட்டு அதை இல்லாமற் செய்துவிட்டார். லண்டன் நூதனசாலையில் இடம்பெற்ற இந்தச் சதி காலங்கடந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்த அவரது பிரசித்திபெற்ற படம் மீளப் புதுப்பிக்கப்பட்டபோது, அதனைச் செய்த ஓவியக்காரர் அவரது சுருட்டை 'அபேஸ்' பண்ணிவிட்டாராம். 1948ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சேர்ச்சிலின் 'ஒறிஜினல்' படத்தை மாற்றியமைத்த மகாவிண்ணனைத் தேடுகின்றனர் நூதனசாலை அதிகாரிகள்!

## கனடாவில் ஆவிகள் கார் ஓட்டுகின்ற விந்தை!

நோர்த்யோர்க் வாசியான கார்லினோ லெவா 2003ல் மரணமாகி, சடலமும் அடக்கம் செய்யப்பட்டது. ஆனால், இந்த வருட ஜுன் மாதம் இவர் 407 நெடுஞ்சாலையில் கார் ஓட்டிச் சென்று கமராவில் அகப்பட்டு விட்டார்.

407 சாலையில் வாகனம் செலுத்திய கட்டணச் சீட்டு கடந்த மாதம் இவரது வீட்டு விலாசத்துக்கு வந்தபோதுதான் பிரச்சனை வெளிச்சத்துக்கு வந்தது. வீட்டில் வசிப்பது அவரது மனைவி விதவை மட்டுமே.

இறந்தவரின் வாகனம் அவர் இறந்த பின்னர் இலக்கத் தகடு ரத்தாக்கப்பட்டு விற்கப்பட்டு விட்டது. 407 நெடுஞ்சாலை நிர்வாகம் முன்னரும் இப்படிப் பலருக்கு கட்டணச் சீட்டு அனுப்பியுள்ளதாம்.

யாழ்ப்பாணத் தேர்தல்களின்போது இறந்தவர்களின் வாக்குகளை ஆவிகள் சென்று போட்டது போன்றதே இதுவும்!

## தமிழருவி மணியனும் கலைஞர் கருணாநிதியும்!

தமிழருவி மணியனைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஒருகாலத்துக் காங்கிரஸ் பொதுச் செயலாளர். பின்னர் கருணாநிதிக்கு அருகில் இருந்தவர்.

அப்போது, மாநில திட்டக் குழு உறுப்பினராக நியமனமானதால், வீட்டு வாரியக் குடியிருப்பில் வீடு கிடைத்தது. ஈழத்தமிழர் விவகாரத்தில் மு.க வின் போக்கில் வெறுப்புற்ற மணியன் பதவியை துறந்ததுடன் மு. க வைப் பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்தார்.

வழக்கமான பழிவாங்கலில் இறங்கிய மு. க. தமது முதல் நடவடிக்கையாக வீட்டு வாரியக் குடியிருப்பிலிருந்து அவரை வெளியேற்ற உத்தரவிட்டார். மணியன் சும்மா இருக்கவில்லை. உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தார். மாநில அரசின் உத்தரவை ரத்துச்செய்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

கலைஞர் கருணாநிதியின் முகத்தில் தமிழருவி மணியன் கீறிய முதல் கரிக்கோடு இது!

## செம்மொழி மாநாட்டின் 30 ருபா உணவுப் பொட்டலம்!

செம்மொழி மாநாட்டுக்கு ஈழத்திலிருந்து பேராளராகப் போன விரிவுரையாளர் ச. லலீசன் யாழ்ப்பாணம் 'உதயன்' பத்திரிகையில் இது தொடர்பாக தொடர் கட்டுரை எழுதி வருகிறார்.

ஜுலை மாத இறுதி வாரக் கட்டுரையின் இறுதிப் பகுதியைப் படியுங்கள்: "...கிழக்குப் புறத்தில் விசேட உணவுக்கூடம் அமைக்கப்பட்டிருந்தது. இங்கு 30 ரூபா விலையில் மதிய உணவு வழங்கினர். கூட்டம் அலை மோதியது. சிலர் அதனை வாங்கி 40 ரூபாவுக்கு விற்பதைக் கண்டேன். எங்கள் 'உறவுகள்'தானே என நினைத்துக் கொண்டேன்!"

'ஓசி'யில் போனது காணாதென்று, அதற்குள் 'பிசினஸ்' வேறா?

**உதாசனன் உலா விருந்து**

## அக்கரையிலிருந்து ஆளிழுப்பு மீண்டும் ஆரம்பம்?

ஆட்டம் பாட்டுகளுடன் அரங்கேற்ற நிகழ்வுகள் மீண்டும் ஆரம்பம். கனடியக் கலைமண் களை கட்டுவதாக அக்கரைக் கலைஞர் பிதாக்களும் மாதாக்களும் கண் சிமிட்டுகின்றனர்.

அவர்களை வரவழைப்பதுடன் ஆளிழுப்பும் ஜோராக நடைபெறுவதாக விடயமறிந்தவர்கள் சொல்கின்றனர்.

கப்பலில் வருபவர்கள் கடலில் தத்தளிக்கின்றனர். இவர்களோ...?

## கட்டைப் பாவாடைக்கும் குட்டைச் சட்டைக்கும் தடை!

நல்லூர் ஆலயத் திருவிழா இந்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஆலயத்துள் செல்ல விரும்புபவர்கள் சில 'கலாசார' விதிகளைப் பின்பற்ற வேண்டியது கட்டாயம்.

பஞ்சாபி, பாவாடை, குட்டைச் சட்டை போன்ற கலாசாரத்துக்கு ஒவ்வாத ஆடைகளை பெண்கள் அணிய முடியாது. சேலை, நீளப்பாவாடை, சட்டை, தாவணி அணிந்தால் மட்டுமே ஆலயத்துள் அனுமதி.

ஆண்கள் நீளக் காற்சட்டை அணிவது முற்றாகத் தடை. வேட்டி அணிய வேண்டும்.

வெளிநாட்டுக் கலாசாரமும் சிங்களக் கலாசாரமும் தமிழ்க் கலாசாரத்தை அழிக்காமலிருக்கத் துணிவான முடிவு! வெளிநாட்டு ஆலயங்களிலும் இதனை அமுல் செய்தால் என்ன?

## பிச்சைக்காரர் கொலைகளில் லகரங்கள் சம்பந்தம்

கொழும்பில் கல்கிசை, தெகிவளை, கொம்பனித்தெரு ஆகிய இடங்களில் அண்மையில் இரவு வேளைகளில் சில பிச்சைக்கார் அடித்தும் கல்லெறிந்தும் கொல்லப்பட்டனர். காரணம் தெரியாது மண்டையைச் சொறிந்தவர்களுக்கு பதில் கிடைத்து விட்டது.

இவர்கள் லட்சாதிபதிப் பிச்சைக்காரர். இவர்களிடமிருந்து பல்லாயிரம் ரூபாக்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது. இறந்த ஒருவரது வங்கியிருப்பு லகரங்களில் என்றால் பாருங்களேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம்



# தொலைநகல், மின்னஞ்சல், துண்டறிக்கை விடுதூது!

அடாத்தாக எம்மண்ணை
அபகரித்து நிற்பவனை
விடாப்பிடியாய்ப் போராடி
வெளியேற்றத் தவறுவமேல்
அறம்வெல்லும் எனும்துணிவே
அற்றோராய் அழிந்திடுவோம்!
மறம்வெல்லும் எனநம்பி
மறம்நாமும் புரிந்தழிவோம்!

'உய்திக்காய்ப் போராடும்
உயிரினங்கள் இறுதிவெற்றி
எய்திடலே உயிர்வாழும்!
இலையேல் அழிந்துவிடும்!'
இது'டார்வின்' இயம்பியது!'
எமக்குமிது மிகப்பொருந்தும்!
விதிவசமாய் வருவீழ்ச்சி!
மெய்தான்! அதற்காக
அழுதழுது கிடப்பதனால்,
அசுரர்க்குப் பணிவதனால்
அழிவொன்றைத் தவிரஎதும்
அடைந்திடவே முடியாது!

மூத்தமுழு உரித்தாளி
முழுத்தீவுக் கும்தமிழன்!
காத்துத்தனை ஆண்டுள்ளான்!
கனிதனிப் பண்பாடுடையான்!
இன்றும்பா ரம்பரிய
ஈழத்தா யகம்கொண்டான்!
கொன்றெம்மை அழித்துவரும்
கொடியஇனத் தோடொன்றாய்
நாம்வாழச் சம்மதித்தால்
நமைநாமே அழிப்பதுவாம்!
ஆம்!இந்த உண்மைகளை
ஆதாரம், ஆவணங்கள்
துணைகொண் டுலகுக்குத்
துல்லியமாய் உணர்த்துகின்ற
பணிமூலம் நிச்சயமாய்ப்
பார்நாடு கள்பரிவை
திரட்டிடலாம்! இவற்றையெலாம்
தெய்வம்மகிழ் தூயவராய்க்
கருத்துடனே வெளிப்படையாய்க்
கைக்கொண்டு வந்திடுவோம்!
தகைமைஇவை கொண்டஇனம்
தன்னாட்சி பெறுகின்ற
தகுதிகொண்ட தெனும்,ஐ.நா.
சபை,எண்ப தில்அறிக்கை!

கிழக்குத்தீ மோரைப்போல்,
கொசோவா, றுவான்டாபோல்
அழிப்பின்னல் அணுகாத
தன்னாட்சி பார்வழங்கும்!
ஆள்வோர்க்குப் பலநாடும்,
அங்கெல்லாம் வாழ்வோர்க்கும்
நாள்தோறும் தொடர்ந்து தொலை
நகல், கடிதம், மின்னஞ்சல்,

தொலைபேசி, ஒளிப்பேழை,
துண்டுப்பிர சுரங்களெனச்
சலியாத ஊக்கமுடன்
தமிழர்விடு வோம்தூது!

போர்முற்றாய் முடிந்தபின்னும்
புன்நரிகள் பாதுகாப்பாம்
போர்வையிலே பலமடங்காய்ப்
புவிகாணப் பணம்ஒதுக்கி,
பல்லாயிரம் ஏக்கர்நம்
பசியவயல் நிலம்பறித்து,
வல்லபாது காப்புக்காம்
வலயங்கள் எனச்சொல்லிச்
சிங்களக் குடியேற்றங்கள்
தீவிரமாய் நடத்துகிறான்!
எங்களுக்கோர் தாயகமே
இல்லையென ஆக்கவுந்தான்!
மீள்குடியேற் றும்தமிழர்
வீதிகளில், மரநிழலில்
தேள்,பாம்புக் கடித்தாளாய்த்
தினம்சாக விட்டுள்ளான்!

புலிப்பேரில் இளைஞர்களைப்
புனர்வாழ்வாம் போர்வையிலே
பலிகொடுத்து வருகின்றான்
பலநோய்கட் காளாக்கி!
வீடுவீடாய்க் கற்பழித்தெம்
விதவைகளைக் கொல்கின்றான்!
ஆடைத்தொழி லகப்பெண்கள்
அக்கதியும் புனர்வாழ்வாம்!
எட்டி,யாரும் பார்க்கவிடா
எழுபதாயி ரம்தமிழர்
செட்டிக்குள முகாமில்,கருச்
சிதைவுமுதல் படுகொலைகள்!
படுகொலைப்போர் முடிந்ததுபோல்
பம்மாத்து செய்துகொண்டு
தொடர்கின்றான் மும்முரமாய்த்
துட்டன்இனப் படுகொலையே!

தொலைநகல்கள், மின்னஞ்சல்,
துண்டறிக்கை, ஒளிப்படங்கள்
உலகமெங்கும் தூதுசென்றே
உரைக்கட்டும் இக்கொலைகள்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க் வீ. சிறிகதிர்காமநாதன்

3

# புலம் பெயர்ந்தோர் உளவியல்



இந்த சாராம்சமே உயிரியல் (Biology, Botany, Zoology) இயற்கை விஞ்ஞானங்களின் அடிநாத சிந்தனையாகும். உள வைத்திய உளவியலும் (Clinical & Psychology) இந்த அடிப்படை இயற்கை விஞ்ஞான விதிகளை உள்வாங்கியே செயல்படுகின்றது. சக துறையான மானிடவியல் - Anthropology கூட தனது அறிவியல் செயல்பாட்டில் இக்கருத்தினை அடிநாதமாக கொண்டிருப்பதும் வெள்ளிடை மலையானது.

"புலம்பெயர் உளவியல்" என்கின்ற கூட்டுப் பதம், சொந்த புலத்தில் இருந்து சுய விருப்புடனோ இல்லாமலோ பிடுங்கப்பட்டு, புகலிட புலத்தில் நாற்று நடப்பட்ட (பதிவைக்கப்பட்ட) மக்களின் உள – உடல் இணைப்புடன் கூடிய தக அமைவை (Adaptative) பற்றிய அறிவியல் துறையை சுட்டி நிற்கின்றது எனலாம். இந்த அறிவியல் பின் புலத்தில் புகலிட – புலம் பெயர் சமூக இணைப்பியல் (Intergrative) நான்கு வகையாக அமையும் பண்பை மாதிரிப் படத்தில் கண்டோம். இந்த நான்கு வகை இணைவாக்கத் தொடர்பாடலை சிறிது உற்று நோக்குவோம்.

1. தனியாக்க இணைவாக்கம்
2. கரைதலாக்க இணைவாக்கம்
3. ஓரங்கட்டலாக்க இணைவாக்கம்
4. முழுமையாக்க இணைவாக்கம்

இந்த நான்கு வகை செயல்பாடுகளும் இயற்கையின் நிரந்தர விதிமுறை செயற் கூறுகளாகும். இங்கு முதலாம் இரண்டாம் புலம் பெயர் சந்ததிகளுக்கும், புகலிட சமூகத்திற்கும் இடையில் இயங்குவதனை பார்ப்போம்.

**தனியாக இணைவாக்கம்:**
புலம்பெயர் - புகலிட சந்திப்பு இடம் பெறும் முதலாம் கட்ட செயல்பாடாக தனியாக்க – கரைதலாக்க இணைவு முறையை அவதானிக்கலாம். இவற்றில் தனியாக்கம் என்பதை ஆரம்ப இயங்கு நிலையாக ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அவர்கள் விளக்கப்படி, வேரறுந்து வருகின்ற மக்கள் புது சூழலில், நிலத்தில் பதிவிடும் போது தறுக்கணிக்கப்பட்ட தன்மையுடன் காணப்படுகின்றார்கள் என்கிறார்கள். (தறுக்கணித்தல் என்ற பதம் கீரை, பருப்பு கடையும் போது மசியாது, மையாகாது தனித்து தண்டாகி நிற்றலைக் குறிக்கும். இங்கு இதேமாதிரியாக புகலிட அரசு பல வளமான ஏற்ற சூழல்களை பதியன்களுக்கு (அகதிகட்கு) ஏற்படுத்தி கொடுத்தும் பலர் தறுக்கணித்து நிற்கிறார்கள் என்பர்.) தறுக்கணித்தவர்கள் பற்றி ஆயும் புலம் பெயர் உளவியலாளர்கள் தமது விளக்கங்களில் "கலாசார அதிர்ச்சி" (Cultural Shock) என்ற செயல்பாட்டை அழுத்திக் கூறுகிறார்கள். அதாவது புலம் பெயர் மக்கள், குறிப்பாக ஆசிய நாட்டிலிருந்து வருவோர் இயற்கைவள முதலாதார சமூகத்தில் (Natural resource societies) இருந்து வந்தவர்கள். இவர்கள் சமூக வளமைகள் திறமைகள் பாரம்பரியங்கள் என்பன நில, நீர் (விவசாய, மீன்பிடி) பொருளாதாரக் கட்டுமானத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இந்த சமூகத்தில் சமய நம்பிக்கை, பழமையான வழமைகள், நம்பிக்கைகள், பெரியோர் தெய்வங்களுக்கு விசுவாசமாக இருத்தல், தம்மையே தியாகம் பண்ணும் தயார் நிலையில் இருத்தல், தமக்காக வாழாது குடும்பத்திற்கு தம்மை அர்ப்பணித்தல் பண்பு உயரியதாகத் தட்டிக் கொடுக்கப் படுதல், எதுவும் அதிஸ்டம், தலைவிதி, பிரமன் எழுதிய விதிப்படியே அமையும், தம்மால் எதுவும் மாற்ற முடியாது, குறிப்பு, எண் சாஸ்திரம், கர்மா, முற் பிறப்பு வினை என மனித வாழ்வு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்று. இது கிரகங்களை, எண்களைப் பார்த்தே விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற இன்னோரன்ன கொள்கைகள், மனப்பாங்குகள், நம்பிக்கைகள் நிறைந்த சமூகம்.

இங்கு புதுக் கருத்துக்கள் உள்வாங்கப் படுதல் என்பது மிக மிகத் தாமதமானது. ஆரம்பத்தில் எதிர்த்து முரண்படல் என்பதே முக்கிய ஆயுதமாக இருக்கின்றது. இந்த பின்னணியிலேயே எம் கதாபாத்திரங்கள் "மூர்த்தி – மஞ்சு" விடயம் விளங்கிக் கொள்ளப்படுதல் சரியானதாக அமையும்.

நில - நீர் பொருளாதார சமூகங்கள் தம் சமூகத்தினை சுத்தம் - அசுத்தம், புனிதத் தீட்டு, துடக்கு, பாவம் - புண்ணியம், முற்பிறப்பு, முன் வினை – பின் வினை என்ற விசேட தத்துவ விளக்கத்திலேயே கர்ம விதிப்படியான வர்னாச்சிரம சமூகக் கட்டுமானத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த வர்னாச்சிரமக் கட்டுமானத்தில் இவ்வுலக – அப்பால் உலக சம்பந்தமான இரு தள சமூக விதிகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் தர்ம விதிகளை தவறாது, கேள்விக்குறி இல்லாது அக சுத்தத்துடன் வாழ்ந்து வந்தாலேயே பிறப்பியல் சாகரத்தில் (துன்பத்தில்) விமோசனம் (முக்தி) கிடைக்கும் என்கிறது. ஆக மனிதர் ஏற்கனவே பல நூறு ஆண்டுகட்கு முன்னர், அந்தச் சூழலில் ஒரு கிராமத்தைவிட்டு 4ம் - 5ம் கிராமத்திற்கே போகும் வாய்ப்பு அற்ற நிலையில், நிஜ உலகம் என்பது பற்றிய தெளிவு இல்லாது பெரியோர்களால் விபரிக்கப்பட்ட சொர்க்க – நரக அப்பால் உலகியல் விளக்கத்துடன் தன் கற்பனை உலகில் சஞ்சரித்து மோட்சம் எய்திய "தர்ம நீதிக் கொள்கையே", இன்றைய நவீன சொகுசு வாழ்க்கை சமூகத்தில், உலகமே கிராமமாக இயங்கும் நடப்பியலில் தன் வீறுகொண்ட வரிசையைக் காட்டி நிற்கிறது.

குறிப்பாக சில உதாரணங்கள். கூட்டுக் குடும்ப வாழ்வு, சாதி என்கின்ற தொழி லாளர் பிரிப்பியல் (Division of Lebour), கற்பு கவரி மான், புண்ணியம் செய்தோர் என பல ஏட்டில் எழுதாத சட்டங்களுடன் தம் சூழலில் அர்த்தத்துடன் வீறு நடையுடன் வாழ்ந்து வந்தது. இப்படியா-கப் பல விடங்களை விபரித்து கொண்டே போகலாம்.

இங்கு எமது விடயதானத்திற்குள் நிற்கவேண்டிய கட்டாயத்தால், திரும்பவும் "தறுக்கணித்தவர்" விடயத்திற்கு வருவோம். ஏன் தறுக்கணிப்பு நடைபெறுகிறது. மக்கள் தாம் வந்திறங்கிய சமூகத்தில் அதீத விருப்புடன் தக அமைய முயல்கின்றார்களே அப்போ ஏன் இறுக்கம் (தறுக்கணிப்பு) ஏற்படுகிறது. இதுவும் ஆய்வாளர்கள்கள் மனதில் வந்த கேள்விகளில் முக்கியமானதாகும். இது பற்றி ஆய்ந்து கூறுகையில் உள – உடல் பிரிவு நிலை, உள – வள சிக்கல்கள் போன்ற சிரத்தையைக் கவரும் செய்திகளை முன் வைத்தார்கள். உள – உடல் பிரிவு நிலை பற்றி விபரித்தவர்கள், பதியன்களாக வந்த அகதி மக்கள் புகலிட நாடுகளில் வெறும் "உடல்களாகத்தான் சீவிக்கிறார்கள். அவர்களின் ஜீவன்கள் (ஆத்மாக்கள்) அவர்கள் சொந்தக் கிராமங்களில்

(26ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயின்ரஸ் துரைசிங்கம்



# நவீன உறவுப் பாலமான ‘ஃபேஷ்புக்’ - FaceBook

ஒரு சில வருடங்களுக்கு முன்பெல்லாம், கணினி வைத்திருப்போரில் சிலரிடம் மட்டுமே இணையத் தொடர்பு இருந்தது. இப்போதெல்லாம் இணையத் தொடர்பு என்பது ஒரு அத்தியாவசிய தேவையாக கணினியுடன் ஒட்டிக் கொண்டுள்ளது.

இப்படி இணையத் தொடர்புடன் கூடிய கணினியை வைத்திருப்பவர்களிடமெல்லாம் குறைந்தது ஒரு மின்னஞ்சல் (ஈமெயில்) முகவரி இருப்பதுகூட ஒரு சாதாரண விடயமாகிவிட்டது. இது போன்றே, இணையத் தொடர்புடன் கூடிய கணினியை வைத்திருக்கும் அனைவரிடமும் பொதுவாக இருக்கவேண்டிய விடயங்களாக இன்னும் சிலவும் இருக்கவே செய்கின்றன.

பல்வேறு நாடுகளிலும் பல உறவுகள் வாழ்வதால், ஸ்கைப் (Skype) ஊடாக, இலவசமாக அழைத்துப் பேசுவதற்கும் அதே நேரத்தில் அவர்களை நேரடியாக வீடியோ வடிவத்தில் பார்த்துக்கொண்டே பேசுவதற்கும் ஏதுவான ஒரு சூழலை, ஸ்கைப் வழங்குகிறது. இதேவேளை, சமூகரீதியான தொடர்புகளை வலுவாகப் பேணுவதற்கான ஒரு இலகு சாதனமாகவும், பரஸ்பர இலத்திரனியல் பாலமாகவும், ஃபேஷ்புக் (Facebook) என்றழைக்கப்படும் இணையத்தள தொடர்பாடல், தற்போது ஒரு அவசியமான விடயமாக கணினியுலகில் பயன்படுத்தப் படுகிறது.

ஃபேஷ்புக் இணையத்தளம், உலகப்புகழ்பெற்ற ஹார்வார்ட் (Harvard) பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் ஒரு இணையத்தள உறவுப் பாலமாக 2004ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பாவனைக்கு வந்தது. அந்தப் பல்கலைக்கழகத்தில் பல ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி கற்றதால், அவர்களுக்கிடையில் ஒரு தொடர்பாடலை உருவாக்குவதற்காக, இணையத்தள இலத்திரனியல் தொடர்பாடலைப் பயன்படுத்துவதே ஒரே வழி என்று எண்ணிய சில மாணவர்கள், தமக்கிடையில் சில ஆய்வுகளை நடத்தி, அதன் அடிப்படையில் இந்த ஃபேஷ்புக் என்ற இணையத்தளத்தை உருவாக்கி அறிமுகம் செய்தனர்.

கணினி விஞ்ஞான பாடவிதானத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த மார்க் சூக்கர்பேர்க் (Mark Zuckerberg) என்ற மாணவன், தனது வகுப்பில் படித்துக்கொண்டிருந்த சக மாணவர்கள் மூவரை இணைத்துக்கொண்டு, இந்த இணையத்தளத்தை உருவாக்கும் முயற்சியை முன்னெடுத்தார். எடுவார்டோ சவரின், டஸ்ரின் மொஸ்கோவிற்ஸ், கிறிஸ் ஹியூஜஸ் ஆகிய சக மாணவர்களுடன் இணைந்து ஆரம்ப வடிவமைப்பை உருவாக்கிய சூக்கர்பேர்க், இந்த இணையத்தளத்தில் இணைந்து கொள்ளும் மாணவர்கள், தங்களது ஈமெயில் முகவரியைப் பயன்படுத்தி தமக்கென ஒரு இலவச கணக்கை உருவாக்கி, அதிலே தமக்கு விரும்பிய மாணவர்களுடன் உரையாடுவதற்கும், வீட்டுப்பாடங்கள், கற்கைநெறி சார்ந்த விடயங்கள் உட்பட, தனிப்பட்ட தகவல்கள் படங்கள் மற்றும் இதர விபரங்களையும் சொந்த விருப்பு வெறுப்புக்கள், பொழுதுபோக்குகள், பயணங்கள், அனுபவங்கள், படித்த ஒரு புத்தகத்தின் அல்லது பார்த்த ஒரு திரைப்படம் பற்றிய விமர்சனங்கள் என்று பல்வேறு விடயங்களையும் பரிமாறிக் கொள்ள ஏதுவாக இந்த இணையத்தளம் செயற்படத் தொடங்கியது.

ஹார்வார்ட் பல்கலைக்கழகத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த ஏனைய பொஸ்ரன் பிரதேச உயர் கல்லூரிகளும் தங்களது தொடர்பாடலுக்கு இந்த இணையத்தளத்தைப் பயன்படுத்த விரும்பியதால், இளையவர்களின் சமூகத் தொடர்புக்கான பிரதான ஊடகமாக, ஸ்ரன்ஃபோர்ட் (Stanford) பல்கலைக்கழகம் உட்பட, ஐவி லீக் (Ivy League) குழுவில் அடங்கும் பல கல்வி நிலையங்களும் ஃபேஷ்புக்கில் விரும்பி இணைந்து கொண்டன.

ஃபேஷ்புக்கின் வளர்ச்சியையும் மவுசையும் கண்டு விழித்துக்கொண்ட சில நிறுவனங்கள், தங்களது நிதி மூலதனத்திற்கான வாய்ப்புக்களை வேகமாக ஆராய்ந்தன. 2004ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட இந்த இணையத் தளத்தின் செல்வாக்கு, ஒரு வருடத்திற்குள்ளாகவே மிக அதிகமானோரைக் கவர்ந்திழுத்திருந்தது.

இணையத்தளம் அறிமுகம் செய்யப்பட்ட 2004ம் ஆண்டின் முதல் மாதத்திலேயே, ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் 50 வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள், தமக்கென பிரத்தியேக இலவச கணக்கை இந்த இணையத்தளத்தில் உருவாக்கியிருந்தார்கள்.

2005ம் ஆண்டு, அப்போது இலத்திரனியல் பணப்பரிமாற்றம் மற்றும் கட்டணத்தொகை கொடுக்கல் வாங்கலில் முன்னிலை வகித்த பே-பால் (Pay Pal) நிதி நிறுவனத்தின் அதிபர் பீற்றர் தியெல் (Peter Thiel), ஃபேஷ்புக் இணையத்தின் வர்த்தக ஒப்பந்தத்தின் பங்காளராக, இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்களை முதலிட்டார். 2006ம் ஆண்டில், பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான இணையத்தளங்களை ஒன்றாக்கியதுடன், உலகின் எந்தப் பாகத்திலும் இணையத் தொடர்புள்ள 13 வயதுக்கு மேற்பட்ட யாரும், தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி ஃபேஷ்புக்கில் இணைந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

2006ல், அப்பிள் மற்றும் மைக்ரோசொஃப்ற் நிறுவனங்கள், தங்களது ஊழியர்களை இந்த இணையத்தளத்திற்குள் இணைத்துக் கொண்டு, அதற்கென பெருந்தொகை நிதியை முதலிட முன்வந்தன. 2007ம் ஆண்டு, ஃபேஷ்புக் வர்த்தகத்தின் 1.6 வீத பங்கை மட்டும் பெற்றுக்கொள்ள, மைக்ரோசொஃப்ற் கொடுத்த தொகை 240 மில்லியன் டொலர்கள். இதன் மூலம், அப்போது ஃபேஷ்புக்கின் மொத்தப் பெறுமதி, 15 பில்லியனைக் கடந்தது.

ஃபேஷ்புக்கின் வருமானம் என்று பார்த்தால்கூட, 2006ல் 52 மில்லியன் டொலர் லாபத்தைப் பதிவுசெய்த இந்த இணையத்தளம், 2007லிருந்து 2010 வரை, முறையே 150, 280, 800, 1100 மில்லியன் டாலர் இலாபத்தைப் பதிவு செய்தது. 2008ன் ஆரம்பத்தில், உலகின் 18 நாடுகள் உள்ளடங்கலாக மொத்தம் 800 க்கும் அதிகமான ஊழியர்கள் ஃபேஷ்புக் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

2009ல், கூகிள் உட்பட உலகில் பாவனையிலிருந்த ஒட்டுமொத்த இணையத்தளங்களில், மிக அதிகம் பாவிக்கப்படுகின்ற முதல்நிலை தளமாக ஃபேஷ்புக் உருவானது. சர்வதேச பாவனையாளர்களின் அதீத அதிகரிப்பு காரணமாக, அயர்லாந்தின் டப்ளின் நகரில் சர்வதேச தலைமை அலுவலகத்தை 2009ல் ஆரம்பித்த ஃபேஷ்புக், பல மில்லியன் விருந்தினர்கள் நிமிடத்திற்கு நிமிடம் பாவனையில் இருப்பதைப் பதிவு செய்தது. 2008ம் ஆண்டில், 100 மில்லியன் நிரந்தர பாவனையாளர்களைக் கொண்டிருந்த ஃபேஷ்புக் 2009 ஏப்ரல் மாதத்தில், இரண்டு மடங்காக 200 மில்லியன் பாவனையாளர்களையும், 2009 செப்ரம்பரில் 300 மில்லியன் பாவனையாளர்களையும் கொண்டதாக வளர்ச்சிகண்டு, 2010 பெப்ரவரி மாதத்தில், 400 மில்லியன் பாவனையாளர்கள் என்ற இலக்கையும் கடந்தது.

ஃபேஷ்புக் இணையத்தளத்தின் தொடர்பாடல்களும், அதனூடாக பரிமாறப்படும் கருத்துக்கள் படங்கள் விமர்சனங்கள் குற்றச்சாட்டுக்கள் மற்றும் செய்திகள் போன்றவை, சில நாடுகளில் சர்ச்சைகளை உருவாக்கவும் தவறவில்லை. பாகிஸ்தான், சிரியா, சீனா, வியட்னாம், ஈரான் போன்றவை உட்பட சில அரபிய நாடுகள், தற்காலிகமாக இந்த இணையத்தளத்தை →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா தமிழ் இலக்கியத் தோட்ட விருது









கனடிய தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருது வழங்கும் விழா இந்த வருடம் இரு பிரிவுகளாக கொண்டாடப்பட்டது. இயல் விருது விழா சென்னையிலும் மற்றைய விருதுகளுக்கான விழா ரொறன்ரோ பல்கலைக் கழக மண்டபத்திலும் நடைபெற்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழிலக்கியத்தில் தீவிர சிந்தனையாளராகவும், கோட்பாட்டாளராகவும், திறனாய்வாளராகவும் இயங்கி வந்த திரு கோவை ஞானிக்கும், கல்வெட்டு ஆராய்ச்சிகள் மூலம் தமிழின் தொன்மையை உலகுக்கு உணர்த்திய திரு ஐராவதம் மகாதேவனுக்கும் இவ்வருடத்திய இயல் விருதுகள் வழங்கப்பட்டன.

ரொறன்ரோ பல்கலைக் கழக மண்டபத்தில் 17 ஜூலை அன்று நடைபெற்ற விழாவில் ஏனைய விருதுகள் வழங்கப்பட்டன. புனைவு விருது ஜெயமோகனுடைய கொற்றவை நாவலுக்கு வழங்கப்பட்டது. புனைவு பிரிவில் இரு பரிசுகள் வழங்கப்பட்டன. ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியத்துக்காக கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், ஆஷ் கொலையும் இந்தியப் புரட்சி இயக்கமும் என்ற நூலை எழுதிய ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களுக்கும் இந்தப் பரிசுகள் வழங்கப்பட்டன. கவிதை விருது 'பூமியை வாசிக்கும் சிறுமி' கவிதை தொகுப்புக்காக கவிஞர் சுகுமாரனுக்கு வழங்கப்பட்டது. சுந்தர ராமசாமி நினைவாக வழங்கப்படும் கணிமை விருது இந்த வருடம் தமிழ் லினக்ஸ் கே.டி.ஈ குழுவினருக்கு வழங்கப்பட்டது. மாணவர் பரிசுத்திட்டத்தின் கீழ் அவர் எழுதிய கட்டுரைக்காக கிருபாளினி கிருபராஜாவுக்கு பரிசு வழங்கப்பட்டது. விழாவில் சிகாகோ பல்கலைக் கழக பேராசிரியர் சாஷ எபலிங் (Sascha Ebeling) சிறப்புரை ஆற்றினார்.

# கனடியத் தமிழர் தேசிய அவை உறுப்பினர்கள் பதவியேற்பு



கனடியத் தமிழர் தேசிய அவை உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் கடந்த மாத முற்பகுதியில் ஸ்காபரோ எவரஸ்ட் அரங்கில் கூடியிருந்த பொதுமக்கள் முன்னிலையில் இடம்பெற்றது. கனடிய மற்றும் தமிழர் தேசியக் கொடிகள் ஏற்றல், அக வணக்கம், ஈகச்சுடர் ஏற்றல் ஆகியவையடுத்து உரைகள் இடம்பெற்றன. தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றிய சண் தயாபரன், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடியப் பிரதிநிதி திரு எஸ். திருச்செல்வம், தமிழர் சமூகச் செயற்பாட்டாளர் நேரு. குணரத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். திரு. குயின்ரஸ் துரைசிங்கம் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். கவிதா செந்தில்முருகன் நன்றியுரை வழங்கினார். அன்றைய வைபவத்தில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற உறுப்பினர்கள் கூட்டாக நிற்கும் ஒளிப்படம் இங்கு பிரசுரமாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதன் சண் வழங்கிய Mosaic Program










# தமிழக தமிழீழ உணர்வாளருக்கு கனடாவில் வரவேற்பு







கடந்த மாதம் அமெரிக்க கனடிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தமிழகக் கவிஞர் தாமரை, தோழர் தியாகு ஆகியோருக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடியப் பிரதிநிதிகள் வரவேற்பு நிகழ்வுடன் விருந்துபசாரம் வழங்கி மதிப்பளித்தனர். ஈழத்தமிழரின் இன்றைய அரசியல் நிலை பற்றியும், இது தொடர்பாக தமிகத்தில் நிலவுகின்ற சுவாத்தியம் பற்றியும் தங்களது உரைகளில் இவர்கள் விபரித்துக் கூறினர். தமிழீழ உணர்வுக்கு மதிப்பளிக்காமல் செயற்படும் இந்திய திரைக்கலைஞர்களுக்கு எவ்வாறு புலம்பெயர் தமிழர்கள் ஒரு பாடம் புகட்டலாம் என்பதையும் இவர்கள் தமதுரையில் குறிப்பிடத் தவறவில்லை. தமிழுணர்வுப் பாடகர் திரு. மகராஜன் சிற்றுரை நிகழ்த்தியதோடு ஒரு பாடலையும் மேடையில் இசைத்தார். நடனக் கலைஞர் வாசு சின்னராஜாவின் மாணவிகள் வழங்கிய 'நாம் மீண்டும் எழுவோம்' சிறப்பு நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது. திரு. பாலன் ரட்ணராஜா நன்றியுரை வழங்கினார். (ஒளிப்படங்கள்: சிவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு யூலை - 27வது ஆண்டு











யூலை 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ரொறன்ரோ
நடத்திய கறுப்பு யூலை நினைவு வணக்கத்தில் ஆயிரக் கணக்கில் மக்
கனடியப் பிரதிநிதிகளும் கனடியத் தமிழர் தேசிய அவையும் இணைந்த
கொடியேற்றப் பாடல் ஆகியவற்றுடன் ஆரம்பித்த நிகழ்வு, ஈகச்சுடரேற்ற
மலர் வணக்கம் எனத் தொடர்ந்தது. அடுத்து வானம்பாடிகளின் இசைய
பலவற்றைப் பாடியிருந்த ரி.எல். மகாராஜன் தாயக பாடல்களை, மக்க

நாடு கடந்த தமிழீழ அரசாங்க கனடியப் பிரதிநிதிகளும் கனடியத் தமி
ஆண்டுகளுக்கு முன்னர் யூலையில் ஆரம்பித்த தமிழினப் படுகொலை
தொடர்ந்தும் இனப்படுகொலைக்குள்ளாகி வருகின்றது. இந்நிலையில் ச
வேண்டும். அதற்காக நாம் அனைவரும் தொடர்ந்தும் கடுமையாக உ
விவேகத்துடன் விரைந்து செயற்படும் காலம். அதற்கான பல வேலைத்



போர்க்குற்றங்கள் குறித்து சிறீலங்கா மீது சுயாதீனமான சர்வதேச விச
போர்க்கைதிகள் அனைவரும் உடனடியாக சர்வதேச கண்காணிப்பில்
விடுவிக்கப்படவேண்டும். மனித உரிமைகளை சிறீலங்கா மதிக்கும் வ
வேண்டும் ஆகிய கோரிக்கைகள் ஓன்றுகூடலின் முக்கிய கருப்பொருள்
முன்னெடுப்போம், தமிழீழ தேச விடுதலை கனியும் வரை போராடுவோ
உறுதி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வை கனடிய தேசிய ஊடகங்க
வெளியிட்டிருந்தன. சிபி24 செய்தி நிறுவனம் நேரடியாக அவ்வப்போது
நிகழ்வை ஒளிபரப்பியது. பிரபல வானொலிகள் 680, 640 ஆகியன மு
பத்திரிகை மறுநாள் தனது பதிப்பில் நிகழ்வு குறித்த செய்தியை வெ
ஆனந் ஆகியோரது மாணவிகளின் எழுச்சி நடனங்கள் இடம்பெற்றன.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BLACK JULY - 27th YEAR






றன்ரோ நாடாளுமன்ற குயன்ஸ் பார்க் முன்றலில் கனடியத் தமிழர்கள்
கில் மக்கள் கலந்து கொண்டனர். நாடு கடந்த தமிழீழ அரசாங்க
இணைந்து இந்நிகழ்வை நடத்தின. கனடியத் தேசிய கீதம், தமிழீழ
சுடரேற்றம், அகவணக்கம், படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான
இசையில் தமிழகத்தில் இருந்து வந்திருந்த தமிழீழ தாயக பாடல்கள்
, மக்கள் அவலங்களை வெளிக்கொணரும் பாடல்களைப் பாடினார்.

யத் தமிழர் தேசிய அவையின் பிரதிநிதிகளும் உரையாற்றினர். 27
காலை இன்று 27 ஆண்டுகள் கடந்தும் தொடர்கின்றது. ஈழத்தமிழினம்
மயில் சர்வதேசம் தனது மனிதநேய கடமைகளை உடன் ஆற்ற
ாக உழைக்க வேண்டும். இது நாம் துவண்டு கிடக்கும் நேரமல்ல
வேலைத்திட்டங்கள் விரைந்து முன்னெடுக்கப்படும் என உறுதி கூறினர்..

தச விசாரணை தாமதமின்றி உடன் நடத்தப்பட வேண்டும்.
ப்பில் கொண்டுவரப்பட வேண்டும் நிபந்தனையின்றி
தும் வரை, ராஜதந்திர - பொருளாதாரத் தடைகளை உலகம் விதிக்க
பொருள்களாக முன்வைக்கப்பட்டன. இவ்விடயங்களை உறுதியுடன்
ாடுவோம் என மெழுகுவர்த்திகளை ஏந்தியவாறு இறுதியில் மக்கள்
டகங்கள் பலவும் முக்கியத்துவம் கொடுத்து செய்தி
பபோது நிகழ்வை ஒளிரப்பியது. குளோபல் தொலைக்காட்சியும்
பன முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டன. ரொறன்ரோ சன்
ப வெளியிட்டது. நாட்டியக் கலைஞர்கள் வாசு சின்னராஜா, பத்மினி
ற்றன. -**ஒளிப்படங்கள் இந்திரன்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், சமய, நடன, மிருதங்க, இசை தொடர்பான புறோமாரின் சொந்தத் தயாரிப்புகள் யூன் 6ம் திகதிமுதல் விற்பனைக்கு வருவதால் அவற்றின் கொள்வனவாளர்கள் இந்த விளம்பரத்துடன்மேலதிக விலைக் கழிவையும் பெற்றுக்கொள்ளலாம்

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

2010முதல் அதிகமான பொருட்கள்
எங்களின் சொந்த தயாரிப்பு என்பதால் இந்த
பொருட்களோ, விலையோ வேறு **எங்கும்** கிடைக்காது.



*On high, with your thoughts*

**PRO MAR**
**Awards & Promotions Ltd**

**www.promarawards.com 416-291 2344**

***585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5***

**A B**

# AB LEGAL SERVICES
## Professional Corporation

## Kauvsegan.E
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200 Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறமகள்

# வேட்பச் சொற்பெருக்காளர் வேந்தனார் நூல்கள்

**அமரர் வித்துவான் வேந்தனாரின் மூன்று நூல்களின் வெளியீட்டு வைபவத்தை அவரது மகள் கலையரசி சின்னையா அவர்கள் அடுத்த மாதம் ரொறன்ரோவில் நடத்த ஏற்பாடு செய்துள்ளார். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

1950-60களில் தமது புதுமை கலந்த எழுத்துகளாலும் சொற்பெருக்காலும் தமிழ் பேசும் நல்லுலகைப் பண்டிதத் தமிழிலிருந்து விடுவித்து, எளிமையான செந்தமிழ் பிரயோகத்துக்கு இட்டுச் சென்றவர் அமரர் க. வேந்தனார்.

தற்காலத்திலும்கூட பெயரளவில் அறியாது விடினும் புகழ்வாய்ந்த "காலைத் தூக்கிக் கண்ணிலொற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா" குழந்தைப் பாடல் இலங்கையின் மூலை முடுக்கெங்கும் இசைப்பாடலாகவும், நடனப் பாடலாகவும் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

புலம்பெயர் தமிழர் வாழும் நாடுகளிலும் சிறுவர் அசையோடும் அன்புப் பெருக்கோடும் ஆனந்தத்துடனும் இதனைப் பாடி மகிழ்கின்றனர்.

யாழ்ப்பாணம் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட வேந்தனாரின் பெற்றோர் கனகசபை-சவுந்தரநாயகி தம்பதிகள்.

1918ல் பிறந்த இவரது இயற்பெயர் நாகேந்திரம்பிள்ளை. இளமுருகனாரிடம் பாடம் படித்தபோது அவரே தமிழ்ப் பெயர் வைக்கத் தூண்டினாராம். பணிவேந்தன் என்று முதலில் வைத்து, பின்னர் 'பணி'யை விட்டுவிட்டதாக அவரே தமது பாலபண்டித வகுப்பில் கூறினார்.

பாடசாலைப் படிப்பு முடிந்ததும் ஆசிரிய பயிற்சிக்கு அல்லது ஆங்கிலப் பாட-சாலைக்குப் பணம் செலுத்திப் படிக்கவே பலரும் செல்வர். ஆனால் இவரோ, அந்தக்காலத்தில் நிலவிய சுதேசிகளின் எழுச்சியால் ஆங்கில மொழியிலும் அதன் மதத்திலும் வெறுப்புற்று தமிழில் உச்சங்காண விழைந்தார்.

பண்டித பரீட்சைக்கான பாடங்களுக்கு அவ்வத்துறை வல்லுனர்களைத் தேடிப்போய் குருமுகமாக ஐயம் திரிபு அறக்கற்று பண்டிதராகி, பின்னர் மதுரைச் சங்க பரீட்சை எழுதி அதிலும் சித்தி பெற்றார்.

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரிய பயிற்சி வகுப்புகள் வைத்தபோது அதன் அதிபராகவிருந்த சு. நடேசன் அவர்களால் வேந்தனார் அழைக்கப்பட்டு, அங்கே பயிற்சி பெற்ற பின்னர் அங்கேயே ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார். அண்ணாமலைப் பல்கலைக் கற்கை நெறிச் சித்தி வித்துவான் பட்டத்தைப் பெறவைத்தது. 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்பதுபோல வாசிப்பின் ஊடாகப் பலவற்றையும் தேடித்தேடிப் பெற்றார்.

நாவலர் பாடசாலையில் நடைபெற்ற பண்டித, பாலபண்டித, பிரவேச பண்டித வகுப்புகளுக்கு வாரவிடுமுறைத் தினங்களில் கற்பித்தல் சேவையிலும் ஈடுபட்டார்.

பண்டிதத் தமிழையும், வாசிப்பது போலவே பேசுவதையும் கேட்டுப் பழகியவர்களுக்கு, இவரது வித்தியாசமான பேச்சு நடையும், குரலின் ஏற்ற இறக்கமும் எடுத்தல் படுத்தல்களும் வினா-விடை உத்தி முறையும், எளிமையான புதுமைத் தமிழும், உணர்ச்சிக் கலவையான முகபாவமும் கையாட்டலும் இதுவல்லவா தமிழ்! இதுவல்லவா பேச்சு! எனச் சிந்திக்க வைத்தது.

இவரது புதுமைக் கருத்துகளுக்குப் பல உதாரணங்களைச் சொல்லலாம். செந்தமிழ் பாடிய நாவுக்கரசரின் தேவாரங்களில் இசையும் இனிமையும் சேர்ந்ததனால்தான் வேதாரணியத்தின் துருப்பிடித்த இரும்புப்பூட்டு இளகித் திறந்தது என்பார்.

பண்டிதர்கள் வழமையான சங்ககால இலக்கியங்களையும் அந்தக்கால மதங்கள் செடிகளையும் அப்படியெ ஒப்பிப்பர். ஆனால், வேந்தனார் அன்றாட நிகழ்வுகளிலிருந்து தரும் உதாரணங்கள் புரிதலைச் சுலபமாக்கிவிடும்.

அன்று தேரில் காதலன் ஓடிவந்தான்; இன்று காரில் வருகிறான். ஆசையோடு பார்த்த பூவைப் பறித்துக் கொடுத்து அன்று அறிமுகமானான்; இன்று காற்றடிக்கப் பறந்து சென்ற கைக்குட்டையை ஓடி எடுத்துக் கொடுத்து அறிமுகமாகிறான் என இவரது உதாரணங்கள் பலவற்றைக் கூறலாம்.

இவரது சிறுவர் பாடல்கள் சிலவற்றுக்கு பேராசிரியர் சந்தனநங்கை எளிமையாக இசையமைத்து ஆசிரிய மாணவர்களுக்குக் கற்பித்ததால், பல பாடல்கள் எங்கும் வியாபித்தன.

"மழைமுகுலும் கூடுது; வண்ண மயிலும் ஆடுது" என்னும் பாடல் இயற்கை இன்பத்தைச் சிறாருக்கு அள்ளி ஊட்டுவது.

வேந்தனாரின் தன்னிகரில்லாத் தமிழ், குழந்தை மொழி, கவிதைப் பூம்பொழில் ஆகிய நூல்கள் அவரது புதல்வி திருமதி கலையரசி சின்னையா அவர்களின் முயற்சியால் அடுத்த மாதம் வெளியீடு காணவுள்ளன. வேந்தனாரின் புதல்வர் இளம்சீர் இங்கிலாந்தில் வசித்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஃபேஷ்புக்'..


தடை செய்ய ஆரம்பித்தன. பல நாடுகளில், வேலையிடங்களில் ஃபேஷ்புக் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இது தவிர, ஃபேஷ்புக் பாவனையாளர்கள் தங்களது அதிகரித்த ஈடுபாடு மற்றும் சமூகத் தொடர்பாடல் காரணமாக, தங்களது பிரத்தியேக தகவல்களை தங்குதடையின்றி பரிமாற ஆரம்பித்ததால், தனிப்பட்ட பிரச்சனைகள் பலவற்றிற்கும் முகம் கொடுக்கும் இழுபறிகள் உருவாகின. ஃபேஷ்புக்கில் தொடர்புகளை ஏற்படுத்திய பல இளையவர்கள், தம்மோடு தொடர்பை உருவாக்கும் அனைவரும் உண்மையான தகவல்களையே வழங்குவதாக நம்பி ஏமாந்த பல சம்பவங்களும் பதிவாகின.


தற்போதும் கூட, ஃபேஷ்புக்கில் பதிவு செய்யப்படுகின்ற விபரங்களை, படங்களை, கருத்துக்களை, அதே இணையத்தளத்தைப் பயன்படுத்தும் உலகெங்குமுள்ள பல பில்லியன் பாவனையாளர்களும் பார்க்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ளாமல், பலரும் அவசரப்பட்டு தங்கள் தனிப்பட்ட விபரங்கள் மற்றும் படங்களைப் பரிமாறுவதால், பல பிரச்சனைகளுக்கு இளையவர்கள் முகம் கொடுக்க நேருகிறது. ஃபேஷ்புக்கில் பரிமாறப்படும் அனைத்தையும், சரியான முறையில் நிர்வகித்து, உரியவர்களோடு மட்டும் பரிமாறுவதற்கான வசதிகள் இந்த இணையத்தளத்தில் உள்ளன. ஆனால், அவற்றை சரியாகப் பயன்படுத்தத் தவறும் பலரும், தங்களது தனிப்பட்ட படங்களைப் பரிமாற, அவற்றை வேகவேகமாகத் தரவிறக்கம் செய்யும் தீயநோக்கம் கொண்ட நயவஞ்சகர் பலரும், அந்தப் படங்களை அல்லது தகவல்களைத் துஷ்பிரயோகம் செய்யும் நிலைமைகள், பலருக்கு அவசியமற்ற கவலைகளையும் பிரச்சனைகளையும் தோற்றுவிக்கும் சூழ்நிலை காணப்படுகிறது.

நாமெல்லாம் பாடசாலை மாணவர்களாக இருந்த காலத்தில், நாட்டின் பல பாகங்களிலும், வெளிநாடுகளிலும், சில சமூகத் தொடர்பாடல்களை உருவாக்க ஆசைப்பட்டதுண்டு. அப்போது பேனா நண்பர்களின் பெயர் முகவரிகளுக்கென, பத்திரிகைகளின் பல பக்கங்கள் முழுமையாக ஒதுக்கப்பட்ட காலங்களும் உண்டு. இந்த முகவரிகளுக்கு கடிதம் எழுதுவதும், பதிலுக்காக ஏங்குவதும், தபால்காரர் பதில் கடிதத்தைக் கொண்டுவந்துவிட்டால், கனவின் உச்சியில் ஆகாயத்தின் முகில் கூட்டத்திற்குள் நடிகர் பாக்கியராஜ் பாணியில் 'வான் மேகங்களே' என்று டூயட் பாடுவதுமென, மீண்டும் நிஜ உலகிற்கு வருவதற்கே சில நாட்கள் எடுக்கும்.

ஒரு பேனா நண்பர் என்பது, பின்னர் பல நாடுகளில் பல பேனா நண்பர்கள் என்று விரிவடைந்து, உலகெங்கும் கடிதத் தொடர்பு வலுத்தது. இந்தத் தொடர்புகளில் புளகாங்கிதமடைந்த பலர், இதன் விபரீதங்களை அறியாமல், சில மேற்குலக நாடுகள் உட்பட, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, கம்போடியா, வியட்னாம், லாவோஸ், மயன்மார், மலேசியா, சிங்கப்பூர் என்று பல நாடுகளிலும் தங்கள் பேனா நட்பை, சற்றே இறுக்கமான உறவு வட்டமாக வளர்க்க ஆரம்பித்து, சில வறிய நாடுகளின் வரலாறு அறியாமல், பேனா மூலம் புளுகியதை, அப்படியே நம்பி அந்நாடுகளுக்கு பயணமும் மேற்கொண்டு, இறுதியில் சிக்கிய, சறுக்கிய, மும்முடிச்சிட்டு பின் விழி பிதுங்கிய பல வரலாறுகள் உண்டு. இந்த நிலை, தற்போதைய ஃபேஷ்புக் பாவனையாளர்களுக்கும் வந்துவிடாமல் தவிர்க்க, போதிய கவனமெடுப்பது எமது கடமை.

எனவே, ஃபேஷ்புக் இணையத்தளத்தின் மிகச் சிறந்த சமூகத் தொடர்பாடலை வேகமாக மட்டுமல்லாமல், விவேகமாகவும் பாவிக்கப் பழகுவதுடன், எச்சரிக்கையை மட்டுமன்றி முன்னெச்சரிக்கையையும் முதன்மைப் படுத்தினால், அவசியமற்ற சிக்கல்களைத் தவிர்த்துக்கொண்டு, ஃபேஷ்புக் என்ற நட்புத் தளத்தை நயமாகப் பாவித்து நன்மையும் இன்பமும் பெறலாம்.



பா(f)ன்ஸி Fancy Florist பூக்கடை



கனடாவின் முதன்மையான, முன்னணி நிறுவனம்.

திருமண மண்டப அலங்காரம், மணமாலைகள்,
வாழையிலை, மாவிலை, தோரணம்
இறுதிச் சடங்கு மாலைகள் மற்றும் பூக்கள்





தொடர்புகளுக்கு வரதன்

1688, Victoria Park Ave., North York, ON

**416 288 1419**



இணையத்தளம்: www.fancyflorist.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாஜினி பாலராஜன்

# பெண்ணின் பொழுது 26

## நகை செய்யும் கலை - 3

### மணி வகைகள்

நகை செய்வதற்குப் பாவிக்கப்படும் மணிகள் பலவித அளவுகளிலும் நிறங்களிலும் வகைகளிலும் கிடைக்கின்றன. வகைகள் என்று சொல்லும் போது கண்ணாடி மணிகள், முத்துக்கள், கிறிஸ்டல் மணிகள், செயற்கை மணிகள் போன்றவை. இவ்வாறான மணிகள் எவ்வாறு இனம் பிரிக்கப் படுகின்றன என்பது ஒரு மிகப் பெரிய கேள்வியாகி நிற்கின்றது.

### முத்துக்கள்

முத்துக்கள் நன்னீரிலிருந்து இயற்கையாகக் கிடைப்பவை என்பதனால் இவை organic gem என அழைக்கப்படும். இந்த நன்முத்துக்கள் முக்கியமாக இரண்டு வகையாகப் பிரிக்கப்படும். அதாவது இயற்கை முத்துக்கள், விளைவிக்கப்பட்ட முத்துக்கள் (cultured pearls) என்பன ஆகும். இரண்டு வகை முத்துக்களும் சிப்பி oysters அல்லது மட்டி எனப்படும் mussels என்பவற்றுள்ளேயே விளைகின்றன. இயற்கை முத்துக்கள் இயற்கையாகவே சிப்பியினுள் தற்செயலாக ஒரு வித்தியாசமான பொருள் செல்வதனால் விளைவது. விளைவிக்கப்பட்ட முத்துக்கள் செயற்கையாக சிப்பியினுள் செலுத்தப்பட்டு விளைவிக்கப் படுவது. ஆனால் பார்வைக்கு இரண்டும் ஒத்த மாதிரியே இருக்கும் என்பதால் சில சமயம் முத்து ஆராய்வு விற்பன்னர்களே இவற்றை அடையாளம் காண்பதில் தவறிழைத்து விடுவார்கள். இதைவிட செயற்கை முறையில் பிளாஸ்டிக்கில் தயாரித்த முத்துக்களும் உண்டு.



### கண்ணாடி மணிகள்

கண்ணாடி மணிகள் தான் மிகவும் சாதாரணமான இலகுவாகக் கிடைக்கக் கூடியவை. இவற்றிலும் இந்திய கண்ணாடி மணிகள், hand-blown glass beads, Czech glass beads என்று கூறப்படும் சில வகைகள் உண்டு. இவை மிகவும் வேறுபட்ட விதத்தில் பல வர்ணங்கள் சேர்க்கப்பட்டு அழகான அமைப்புக்களில் உருவாக்கப்பட்டவை. இவற்றிலும் hand-blown glass beads சிறிது விலை அதிகமானது.

### கிறிஸ்டல் மணிகள்

சுவராஸ்கி கிறிஸ்டல் (Swarovski)

இவை மிகவும் துல்லியமாக ஒளி வீசக் கூடிய மணிகள் ஆகும். இவற்றினை வாங்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏமாற்றி விடுவார்கள். தற்போது மிகவும் பிரகாசமான கண்ணாடியிலான அதே சமயம் சுவராஸ்கி கிறிஸ்டலினை ஒத்த மணிகள் விற்பனையாகின்றன.

### பிளாஸ்டிக் மணிகள்

இவை கிட்டத்தட்ட 300 வகைகளில் பலவித வர்ணச் சேர்க்கைகளில் கிடைக்கின்றன. மிகவும் விலை குறைந்தவை.

இவற்றை விட உலோகத்தாலான மணிகள் (Metal) மரத்தினாலான மணிகள் (wood) என்பவையும் மிகவும் சுலபமாகக் கிடைக்கும்.

தொடரும்


ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
S.P. Importers





Fresh Fish & Meat
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

Furniture & Mattress
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

Grocery & Vegetables
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

Video & Audio
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

**Dr. Shan - Thursday (morning)**
**Dr. Yao San (Tue, Fri & Sat**
**Dr. Brian (monday)**
**Dr. May (wednesday)**

**(416) 690 0121**

**Computek College**

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

*If you are :*

- Currently receving E.I benefits
- Received E.I within past 3 yrs.
- Just finished / received maternity benefits within past 5 yrs

*You may be eligible for HRSDC funding to upgrade your skills*

**NEW LOCATION IN MARKHAM !**

**Diploma**

Early Childcare Assistant
Network Engineering
Personal Support Worker (PSW )
Computerized Accounting
Business Administration
Medical Office Admin (MOA)

Certificate

MS Office, A+, C/C++ , Java
AccPac, Quick Books
Simply Accounting

**Markham Campus**
Markham / Steeles
(On Steeles,1 Block East of Markham Rd)
905.471.3344

**Scaborough Campus**
Kennedy / Sheppard
(North-East Corner)
416-321-9911

**Toronto Campus**
Kennedy / Eglinton
N/W Corner, Above Library
426.285.9941

PLEASE NOTE THAT NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தப் பெருக்கை தடுக்கும் மருந்து

பிரித்தானிய அரசினால் நடத்தப்பட்ட ஆய்வொன்றின்படி Tranexamic acid (TXA) எனப்படும் மிகக் குறைந்த விலையில் பெறக் கூடிய ஊசி மருந்தினை விபத்தினால் காயமுற்ற வருக்கு செலுத்தும் போது இரத்தப் பெருக்கு குறைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்து ஏற்கனவே பணக்கார நாடுகளில் பிரத்தியேகமாகச் செய்யப் படும் இருதய அறுவைச் சிகிச்சைகளின் போது இரத்தப் போக்கைத் தடுப்பதற்காக பாவிக்கப்பட்டு வருவது தான். ஆனால் இதுவரை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாவிக்கப்படவில்லை.

இம்மருந்கை எந்த நிறுவனமும் தயாரிக்கலாம். இதன் விலை ஒரு கிராமுக்கு 4.50 அமெரிக்க டாலர்க ளாகும். காயப்பட்டவருக்கு இரண்டு கிராம் போதுமானது. ஆய்வுகளின் போது 15 வீதமான காயப்பட்டோர் இந்த மருந்தின் பாவனையினால் இறப்பிலிருந்து காப்பாற்றப்பட்டனர்.

இதனை ஊசி மூலம் காயப்பட்டவ ருக்கு ஏற்றலாம். இதன் விலை குறைவாகக் காணப்படுவதனால் வறிய நாடுகளிலும் கூட கிடைக்கக் கூடிய நிலை ஏற்பட்டால் இதனைப் பாவிப்பதன் மூலம் பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காப்பாற்ற லாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்திலிருந்து நாற்பத்தைந்து வயது வரையானோரிடையே உலகில் எயிட்ஸிற்கு அடுத்ததாக விபத்து களே இறப்பிற்குக் காரணமாக அமைகின்றன.

வருடாந்தம் ஏறத்தாழ 600 000 பேர் இரத்தப் போக்கு காரணமாக இறக்கின்றனர். அத்துடன் வருடாந்தம் 6 மில்லியன் மக்கள் விபத்துகள் காரணமாக உயிரிழக்கின்றனர்.



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

6

மனித வாழ்வுக்கு விளைநிலம் மனம்தான். மனதிலிருந்தே எண்ணம் - சொல் - செயல் என்ற மூன்று வித தொழில்களும் ஆரம்பமாகின்றன. எண்ணம் இருவகையாக செயற்படுகின்றது. கற்பனை, ஞாபகசக்தி என்பவைகளை ஆதாரமாகக் கொண்டு எண்ணம் பிறக்கிறது. எண்ணத்தினைச் செயற்படுத்துவதே மூளையின் வேலை.

மனதின் தூண்டுதலால் மூளை செயற்படுவதற்கு உடலிலுள்ள காந்தசக்தி உதவுகிறது. இந்தச் சக்தியின் அளவு சிலரிடம் குறைவாகவும் சிலரிடம் அதிகமாகவும் உள்ளது. ஒருவரின் உன்னதமான வாழ்வுக்கு எமது உடலில் உள்ள காந்த சக்தியே காரணம். இன்றுவரை இதுவே புரியாத புதிராக உள்ளது. மனம் மூளையை செயற்படுத்த திரும்பவும் மூளை மனதினை செயற்படுத்த ஒரு சுழற்சி அடிப்படையில் இது நிகழ்கின்றது. விஞ்ஞானம் ஒரு புறத்திலும் ஆன்மீகம் இன்னொரு புறத்திலும் முயன்றும் கிடைக்க முடியாதது இந்த மனம்தான்.

மனித காந்த சக்தியை ஜீவ மின்சாரம் எனவும் அழைக்கலாம். எமது உடல் நலத்துக்கும், உடல் இயக்கங்களுக்கும் இது அத்தியாவசியமானது. இரத்த ஓட்டம், வாயு ஓட்டம், வெப்ப ஓட்டம் அனைத்திலும் இது உள்ளது. மூளையிலிருந்து ஜீவ மின்சாரம் நரம்புகளின் வழியாகப் பாய்ந்து கொண்டிருக்கின்றது. எமது கை, கால்களை நீட்டவும் மடக்கவும் நடக்கவும் நிற்கவும், சுவாசம் செய்வதற்கும். உணவு ஜீரணிப்பதற்கும் ஜீவ மின்சாரம் தேவைப்படுகின்றது.

தெளிவு பெற வேண்டின் உடலை இயக்கும்போது உந்து சக்தி மூளை, மூளையை இயங்க வைக்கும் உந்து சக்தி மனம், மனிதனை இயங்க வைக்கும் சக்திதான் இந்த ஜீவ மின்சாரம். இதனை அளவிடுவதற்கு ஜாயிர் என்ற மனோதத்துவ விஞ்ஞானி ஒரு கருவியைக் கண்டு பிடித்தார். அதற்கு, ஸ்தனோமீட்டர் (sthenometer) என்று பெயர். இது உடல் மின்சாரத்தினை அளக்க உதவுகிறது.

'பிரொய்ன் மத்தியுஸ்' என்ற பிரபல விஞ்ஞானி மனிதனின் உடலிலுள்ள மின்சார சக்தியை ஒன்று சேர்த்தால் ஒரு மின்சார மணியை ஒலிக்கச் செய்யுமளவுக்குப் போதுமானது என்று கூறியதுடன், மின்சார மணியை ஒலிக்கவும் செய்தார். 1930ஆம் ஆண்டில் இது நடைபெற்றது. வியப்புக்கு மேல் வியப்பளிக்கும் செய்தி இது.

மின்சாரத்துக்கு இரு முனைகள் இருப்பதை அனைவரும் அறிவர். ஒன்று உடன்பாடு (positive). மற்றையது எதிர்மறை (negative). இவ்விரண்டுக்கும் தொடர்புண்டு. ஒன்று மற்றையதைத் தம்பால் இழுத்துக்கொள்ளும் தன்மையது. இதுபோலவே, உடலும் எதிர்மறை மின்சாரத்தினைக் கொண்டுள்ளது. மனம் உடன்பாடு மின்சாரத்தினையுடையது. இதில், மனதிலுள்ள மின்சாரம் வலுவுடையது. இதனைப் பெருக்கி, வளப்படுத்திக் கொள்ள தெரிந்தவர்கள் ஆற்றலுள்ளவர்களாகின்றனர். உடலில் உள்ள எதிர்மறை மின்சாரத்தைப் பெருகவிட்டால், நாம் விலங்கு நிலைக்குச் சென்று விடுவோம். எனவே, மனதின் ஜீவசக்தியைப் பெருக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

உங்கள் மனதினை மகிழ்ச்சியால் நிரப்பிக் கொள்ளுங்கள்.

மீண்டும் சந்திப்பேன்!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர்ந்தோர்...

தங்களின் சொந்தங்களின் நினைவு நிழல்களுடன்தான் அக உலகில் சஞ்சரிக்கறார்கள். ஜீவத்தன்மையுடனான உள – உடல் கலந்த அத்துவித நிலை இல்லாமல் இருக்கிறார்கள். இதனால் "இயந்திர மனிதர்களாக" (Robots) புகலிட நாட்டில் அசைகிறார்களே ஒழிய, அவர்கள் சம்பாஷணை, சிந்தனை முழுதாக ஊர்பற்றியதாகவே இருக்கின்றது.

இந்த அதீத அக – உலகு சார்ந்த வாழ்வியலில் மக்கள் அமிழ்ந்து இருப்பதால், உயிர்த்துடிப்பு நிலை இயற்கையாக இல்லாது இருக்கின்றது. இந்த வெற்று இடைவெளியை நிரப்ப பல அசௌக்கிய வழிகளை நாடுகிறார்கள். உதாரணமாக மதுவகை, போதைப் பொருட்கள், மத மாற்றங்கள், அதீத விரதங்கள், நோன்புகள், மத நம்பிக்கைகளில் கூடுதலாகச் சரணடைதல் போன்ற பல விடயங்கள் இடம் பெறுகிறது. இத்துடன் இளம சந்ததிகள் தனியாக இயங்கும் திறன் மங்கி, கூட்டக் குழுவாக, ஒரு தலைவனை கண்மூடி விசுவாசமாகப் பின்பற்றுவோர் கொண்ட குழுக்களாக, மனம் போன போக்கில் தமக்குரிய அடையாளங்களை, லட்சனைகளை பல இடங்களில் இருந்து கடன் வாங்கி இயங்குகின்றார்கள். (இது பற்றிய மேலதிக விளக்கத்தினை "ஓரங்கட்டலாக்கத்தில் பார்க்கலாம்).

இவ்வண்ணம் உள – உடல் பிரிவு என்பது பல தரங்களிலும், பல ரகங்களிலும் இயங்குகின்றது. இந்த உள – உடல் பிரிவு நிலை உளவியல் தளத்தில் இயங்கும் விதத்தினை பார்ப்போம். முன்பு விபரித்த மாதிரி மக்களின் ஜீவ (ஆத்ம, உயிர் மூச்சு) விடயங்கள் புகலிட சூழலில் இல்லை. உதாரணம்: கோவில்கள், பாட்டன் பாட்டிமார்கள், நெருக்கமான அயல் நண்பர் - நண்பிகள் போன்ற மனம் விட்டு குசலம் கேட்கும் வலைப்பின்னல் (net work) போன்ற இவைகள் கைக்கு அகப்படாத நிலையில் அக உலகில் மன நிழல் படங்களாகவே இருக்கின்றன.

இவைகள் வெறும் மன நிழல் படங்கள் அல்ல. ஒருவரின் உணர்வெழுச்சிகளை (emotions) தீவிரப்படுத்தும் தூண்டிகளாக (stimulant) இருக்கின்றன. உணர்வெழுச்சிகளின் துலங்கல்களாக அக சுரப்பிகள், தானியங்கி நரம்பு மண்டலங்கள் (தா.ந.ம) செயல்படுகின்றன. இச்செயல்பாடுகள் எமது சிந்தனை, நடத்தைத் திறமைகளை பாதிக்கின்றன. உள – உடல் பிரிவு நிலையில் உள்ளோர் மனதில் நூற்றுக்கணக்கான யோசனைகள் உள்ளவர்களாகவும், தெளிவான முடிவிற்கு விரைவில் வர முடியாவர்களாகவும், விரைவில் களைத்து விடுபவர்களாகவும், கோபப் படுவோராகவும், மற்றவர்களால் (உதாரணம்: மனைவி, பிள்ளைகள் கூட) விருப்பப்பட முடியாதவர்களாகவும், இன்னும் பல அசௌகரியங்கட்கு உட்படுபவர்களாக இருக்கின்றார்கள். இந்தச் சிரமங்கள் ஆண்,பெண் பால் பேதமில்லாமலும், வயது வந்தோர், சிறுவர் என வயது பேதமில்லாமலும் நடக்கின்றது.

இனி உள – வடு சிக்கல்கள் பற்றிச் சிறிது பார்ப்போம். யுத்த நாடுகளில் இருந்து வந்த அகதி மக்களுக்குரிய விசேட பாதிப்பு இதுவாகும். யுத்த சூழலில் எதிர்பாராத அளவிற்கு பல இழப்புக்கள், சேதங்கள், அழிவுகள் உயிர்க் கொலைகள் போன்ற இலகுவில் ஜீரணிக்க முடியாத நிகழ்வுகள் பல நடந்தேறுகின்றது. இதில் பல மக்கள் நேரடியாக இழப்புகள் சேதங்களைச் சந்தித்தவர்களாகவும், மற்றும் சிலர் நேரடி சாட்சிகளாகவும் புகலிட நாட்டிற்கு வந்து சேர்கிறார்கள். புகலிட நாடு வந்து சேர்ந்ததும் பலர் புதுச் சூழலினால் ஈர்க்கப்பட்டு, தம் பழைய வேதனைகளை மறந்தவர்களாகவும், இனி புதிய பிறப்பு எடுத்து புது வாழக்கை ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கையினாலும் கவரப்பட்டு, பழைய ரணப் படுத்திய நிகழ்வுகளை தமது ஆழ் மனதிற்குள் அமுக்கி விடுகின்றார்கள்.

பழைய ரணம் (காயம்) ஏற்படுத்திய நிகழ்வுகள் அவர்கள் ஆன்மாவாகிய உயிர் நிலையத்தை விட்டு அகல்வதில்லை. காலப் போக்கில் புதுச் சூழலின் கவர்ச்சி, நம்பிக்கையால் அவை "வடுக்களாகி" விடுகின்றன. இந்தச் செயல் நிலைதான் உள – வடு என்பர்.

உள – வடுக்கள் மக்கள் ஆழ் மனதில் அமுக்கப்பட்டு (Repressed) அங்கிருந்து வெளியேறத் துடிக்கின்றது. அவைகட்கு நாம் சந்தர்ப்பம் கொடுக்காதபோது, அவை துர் - கனவுகளாக (mareridt) இரவு நித்திரையில் வந்து நிம்மதியைக் குழப்பிவிடுகின்றது.

(அடுத்த இதழிலும் வரும்)

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**


உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

38

## முதல்வர் கருணாநிதி புகழ்பாடிய தமிழ்ச் செம்மொழி மாநாடு!

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு என பொறுப்பான ஒரு குழு இருக்கும் போது முதல்வர் கருணாநிதியால் முதலில் ஒன்பதாவது தமிழாராய்ச்சி மாநாடு என அறிவித்து விட்டுப் பின்னர் 2011 க்குக் காத்திராமல் முதலாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது எல்லோரும் அறிந்ததே.

அய்ந்து நாள் (ஆனி 23 - 27) கோவையில் பொங்கு தமிழர்கள் எல்லாம் சங்கமித்த முதலாம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தார தப்பட்டை முழங்க கோலாகலமாக நடந்தேறியது.

இந்த மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற குரல் புலம்பெயர் நாடுகளில் ஓங்கி ஒலித்தது. முள்ளிவாய்க்காலில் ஆறாக ஓடிய குருதி காயுமுன் செம்மொழி மாநாடா? என்று தமிழ் உணர்வாளர்களால் கேட்கப்பட்டது.

மாநாடு தொடங்க சில நாள்கள் இருக்கும் போது "உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை தமிழக அரசியலில் இருந்து பிரித்துப் பார்க்க விரும்புகிறோம்" என்ற ஒரு அறிக்கை வெளியானது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் புறக்கணித்தார்களோ இல்லையோ அதிமுக மற்றும் மதிமுக எதிர்க்கட்சிகள் செம்மொழி மாநாட்டைப் புறக்கணித்தன. இப்படியான புறக்கணிப்பு மரபை தொடக்கி வைத்தவர் முதல்வர் கருணாநிதிதான். 1981 இல் மதுரையில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை கருணாநிதி தலைமையிலான திமுக புறக்கணித்தது. தாமரை, அறிவுமதி, காசி ஆனந்தன் போன்ற பாவலர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

2011 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற இருப்பதை மனதில் வைத்து தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. தமிழ் உணர்வாளர்கள், இலக்கியவாதிகள், படைப்பாளிகள் மத்தியில் கருணாநிதியின் மீதான வெறுப்பு மாநாட்டு எதிர்ப்பாக மாறியிருந்தது. அதனை மழுங்கடிக்கவே சிவத்தம்பியை மாநாட்டுக்கு வருந்தி அழைத்துக் கருணாநிதி தனி மாலை மரியாதை செய்திருந்தார். மாநாட்டின் முதன்மை விருந்தினராகவும் ஆய்வரங்குக் குழுவின் தலைவராகவும் சிவத்தம்பி நியமிக்கப்பட்டார். கனிமொழி செயலராக நியமிக்கப்பட்டார்.

சிவத்தம்பி "மன்னவனும் நீயோ? வளநாடும் உனதோ? உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்?" என்று குலோத்துங்க சோழனைக் காறி உமிழ்ந்த கம்பநாடான் பரம்பரையில் வந்தவர் அல்லர். "நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே" என்று வாதாடிய நக்கீரன் வழி வந்தவரும் அல்லர். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம் ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்" என்று வீர முழக்கமிட்ட அப்பரின் தலைமுறையும் அல்லர். சிவத்தம்பி ஆட்சியில் இருப்பவர்களின் கால்பிடித்து அண்டி வாழ்வதை வாழ்வின் தலையாய குறிக்கோளாகக் கொண்டவர். 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடக்கவிடாது முட்டுக் கட்டை போட்ட அன்றைய சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குத் துணையாக இருந்தவர்.

எதிர்பார்த்தது போலவே செம்மொழி மாநாடு தமிழ்த் தாய்க்கு அல்ல முதல்வர் கருணாநிதி குடும்பத்துக்கு என்பது எண்பிக்கப்பட்டுவிட்டது. முதல்வரின் குடும்பத்தைச் சேர்ந்த 84 பேர் மாநாட்டின் முன்வரிசையில் அமர்ந்து இருக்கக் காணப்பட்டார்கள் என விகடன் செய்தி வெளியிட்டது. தமிழ் அறிஞர்கள் பின் வரிசைக்குத் தள்ளப்பட்டார்கள். விதி விலக்கு பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி மட்டுமே. மேடையில் மேற்குலக உடையில் தோன்றிய சிவத்தம்பி தொடக்கத்தில் தமிழில் கொஞ்சம் பேசிவிட்டு மிகுதியை ஆங்கிலத்தில் பேசி முடித்தார். நன்றி கூட ஆங்கிலத்தில் சொல்லப்பட்டது. தனக்கும் ஆங்கிலம் பேசத் தெரியும் என்று காட்டவே ஆங்கிலத்தில் பேசினார் போலும். அவரது ஆங்கிலப் பேச்சு தமிழில் மொழிபெயர்க்கப் படவில்லை.

ஆய்வரங்கைத் தொடக்கி வைத்து உரையாற்றிய பேராசிரியர் சிவத்தம்பி "முத்தமிழ் வித்தகர் கலைஞர் கருணாநிதி உலகத் தமிழருடைய மிகப்பெரிய தலைவராக விளங்குகிறார். தமிழ் மொழியில் பன்முக ஆற்றல் கொண்டவர். தமிழின் பெருமைகளை முற்றும் அறிந்து உணர்ந்தவர்" எனப் புகழாரம் சூட்டினார். "உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை ஒரு சாதாரண மாநாடாக எண்ணிப் பார்க்க முடியாது. இது தமிழ் வரலாற்றில் முத்திரை பதிக்கும் மிகப்பெரிய மாநாடாகவே நாம் காண்கின்றோம்" என்றார்.

மாநாடு முடிந்தபின் சிவத்தம்பி ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டார். ஈழம் பற்றிய கேள்விக்கு சிவத்தம்பி "என் அபிப்பிராயப்படி 'ஈழம்' என்பது சிங்களச் சொல்லில் இருந்து வந்ததாக நினைக்கிறேன்" எனப் பதில் அளித்தார். இந்தக் குழந்தைத்தனமான பதிலில் இருந்து என்ன தெரிகிறது? சிவத்தம்பி தமிழறிஞரே இல்லை என்பது தெரிகிறது. அல்லது அவர் படித்த பாடங்களை மறந்துவிட்டார் என்பது தெரிகிறது.

சங்க காலத்தில் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் நெருங்கிய வணிகத் தொடர்புகள் இருந்தன. அவற்றுள் ஒன்று உணவு. பட்டினப்பாலையில் 'ஈழத் துணவும் காளகத் தாக்கமும்' எனப் புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் குறிப்பிடுகிறார். மேலும் சங்க காலத்தில் பூதந்தேவனார் என்ற பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட புலவர்கள் இருந்திருக்கிறார்கள். ஒருவர் மதுரை பூதந்தேவனார் என அழைக்கப்பட்டார். மற்றவர் ஈழத்துப் பூதந்தேவனார் என்று அழைக்கப்பட்டார். பின்னவர் நற்றிணை (3) குறுந்தொகை (4) அகநானூறு (2) ஆக மொத்தம் ஒன்பது பாடல்களைப் பாடியுள்ளார். ஈழம் அல்லது இலங்கை என்று அழைக்கப்படும் தீவுக்கு சிங்களத்தில் பெயர் இல்லை. சிங்கத்தைக் குறிக்கும் சிகல என்ற சொல் இலங்கையைக் குறிக்க சூழவம்சத்தில் ஒரு தரமும் மகாவம்சத்தில் இரண்டுதரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிறிலங்கா என்பதும் வடமொழிப் பெயராகும். அது தமிழில் இலங்கை என்று திரிபு அடைந்தது. கட்டுரை படித்தவர்கள் சரி, கவிதை படித்தவர்கள் சரி எல்லோருமே தமிழைப் பாடாமல் கருணாநிதி புகழ் பாடினார்கள்' செவியிரண்டும் கிழிந்து போகும் அளவுக்கு பலரும் போற்றி பாடினார்கள். வைரமுத்து, வாலி, விஜய், தமிழன்பன், தமிழச்சி தங்கபாண்டியன், நா.முத்துக்குமார், மு.மேத்தா, பழனிபாரதி, தணிகைச் செல்வன், கயல்விழி, உமா மகேஸ்வரி, தமிழ்தாசன், அப்துல் ரகுமான்,

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**R & S**
**AUTO SALES**
Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**34 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**
5310 Finch Ave. East, Unit 23
Scarborough, ON M1S 5E8

**416-412-3838**
**416-836-5825**

வா.மு.சேதுராமன் எனக் கூழுக்குப் பாடும் ஒரு கவிஞர் பட்டாளம் கருணாநிதிக்குப் பாமாலை பாடிப் புகழ்மாலை சாத்தியது. குறிப்பாக கவிஞர் வைரமுத்து, வாலி, மேத்தா, விஜய் போன்றோர் கருணாநிதியைப் பாராட்டு மழையில் தோய்த்து எடுத்தார்கள்'

கலைஞருக்கு தமிழ் உலகம் நன்றி சொல்ல வேண்டும்
கலைஞர்தான் மறுபடியும் முதல்வராக வேண்டும் (வைரமுத்து)

தலை வைத்ததால் தண்டவாளம் கூட தமிழ் பேசக் கற்றுக்கொண்டது
கலைஞர் கால் வைத்ததால் கோவை மாநகர் செம்மொழி மாநாடு நடக்கும் தகுதி பெற்றது (முத்துக்குமார்)

இக்காலத்து இளங்கோ நீ,
உனது உமிழ்நீர் கூட தமிழ்நீர் தான் உனக்கு,
ஏழைகளின் இக்கால குலோத்துங்கன்,
குடிசைவாசிகளுக்கு கான்கிரீட் வீடு கொடுத்த கரிகாலன்,
பாட்டுடை தலைமகனே, செம்மொழி நாயகனே' (தமிழச்சி தங்கபாண்டியன்)

இதில் கவிஞர் விஜய் முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் சமர் என்ற ஒரு முழு நீள கவிதை நூல் எழுதியுள்ளார்.

எதிரிகள் அவர்களது துப்பாக்கியால் கொன்றார்கள்
உறவினரை நாம் துரோகத்தினால் வீழ்த்தினோம்
எதிரிகளை விட மன்னிக்க முடியாதவர்கள் துரோகிகள்.

இப்படிப் பாடிவிட்டு அவர் எந்த முகத்தோடு இந்த மாநாட்டில் கலந்து கொண்டாரோ தெரியவில்லை.

கருணாநிதியின் பேத்தி கயல்விழியோ கவிதை வாசிக்கும் போது Stop என ஆங்கிலத்தில் எழுதி அந்த இடங்களில் நிறுத்தி வாசிக்கும் "புகழ்" வாய்ந்த கவிஞர், தன் தாத்தாவின் உமிழ்நீர் கூட தமிழ்நீர் எனப் புதிய கண்டுபிடிப்பை மாநாட்டு மேடையில் முழக்கினார்.

வாலியோ தமிழை ஆராய்ச்சி செய்யாமல் குஷ்புவை ஆராய்ச்சி செய்தார். மொத்தத்தில் முதல்வர் கருணாநிதியின் பாராட்டு விழாக்களில் சாத்தவேண்டிய புகழ்மாலைகளை தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் சாத்தினார்கள்.
(மிகுதி அடுத்த இதழில்)

---

## நீரிழிவு...

வருடங்களுக்கு நீரிழிவு வருவதற்கான வாய்ப்பு குறைந்திருந்தது என்பது நம்பிக்கை அளிக்கும் முடிவாகும்.

வாழ்க்கை முறை மாற்றங்களைச் செயற்படுத்த முடியாதவர்களுக்கும் அவற்றை ஓரளவு கடைப்பிடித்தும் குருதியில் சீனியின் அளவைக் குறைக்க முடியாதவர்களுக்கும் மருந்துகள் உதவக்கூடும்.

மருந்துகள் உதவுமா?

மெட்போமின் (Metformin), அகாபோஸ் (Acarbase), ரொஸிகிளிட்டசோன் (Rosiglitazone) ஆகிய மாத்திரைகள், நீரிழிவு வராமல் தடுப்பதற்கு உதவுகின்றன. இதுவும் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.


எனவே, நீரிழிவு வரவாய்ப்புள்ளவர்கள், மேற்கூறியவற்றில் ஒரு முறையை வைத்திய ஆலோசனையுடன் கடைப்பிடிப்பது உசிதமானது.

வேறு நோய்களுக்கான மருந்துகள்.

அத்துடன், பிரஸர் இருந்தால் அதற்கு உபயோகிக்கும் மருந்துகளையும் அவதானமாகத் தெரிவு செய்ய வேண்டும். ஏனெனில், அடனலோல் (Atenolol), எச்சிடி (HCT) ஆகியனவும் அவை சார்ந்த மருந்துகளும் நீரிழிவு வருவதற்கான சாத்தியத்தை அதிகரிக்கக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






எஸ். காந்தி

# வெள்ளிப் பணம் டாலர்

44

இந்த இதழின் வெள்ளிப்பணத் தொடரில் நாம் கனடாவின் Tax Freedom Day என அழைக்கப்படும் விடயத்தினை பார்ப்போம். இதன் தமிழ் ஆக்கம் வரியிலிருந்து விடுதலை பெறும் நாள் என அழைக்கமுடியும். பொதுவாகவே அரசானது தனது பொதுநல செலவீடுகளுக்கும், பொதுநல முதலீடுகளுக்கும் தேவையான பணத்தினை பலவகைப்பட்ட வரிகள் மூலம் பெறுகின்றது. தனிநபர் வருமானவரி, நிறுவனங்களுக்கான வருமானவரி சொத்துவரி விற்பனைவரி என இன்னும் பல்வேறு வகையான பெயரில் அறவிடுகின்றது.

இதேபோன்று கனடாவில் மூன்று படிமுறையில் உள்ள அரசுகளும் அறவிடும் வரியினால், உழைக்கும் மக்கள் உண்மையில் தமக்காக எப்பொழுது உழைக்க தொடங்குகின்றார்கள் என்கின்ற கேள்வி எழுகின்றது. அவ்வாறு உழைக்கத் தொடங்கும் நாள் எதுவோ அதுவே (Tax Freedom Day) வரியில் இருந்து விடுதலை பெறும் நாள் எனக் குறிப்பிடப்படுகின்றது.

2010ம் ஆண்டு June 5ம் திகதி சாராசரி கனடிய மக்களின் வரிவிலக்கு நாளாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இதில் இன்னும் கவனிக்கப்பட வேண்டியது கனடாவின் மாநிலங்களுக்குள் இதன் நாட்கள் வேறுபட்டு அமைகின்றது. இது மாகாண அரசுகள் தமது வருமானவரி மற்றும் விற்பனைவரி என்பவற்றில் வேறுபட்ட விகிதாசாரத்தினை கொண்டிருப்பதுதான்.

உதாரணத்துக்கு, அல்பேட்டா மாகாணத்தில் வரியில் இருந்து சுதந்திரம் பெறும் நாளாக மே 19ம் திகதி அமைகின்றது. நாம் வாழும் ஒன்ராறியோ மாகாணத்திற்கு இது மே மாதம் 31ம் திகதியாக கணக்கிடப்பட்டுள்ளது. இதேபோன்று சஸ்கச்சூவான் யூன்மாதம் 16ம், திகதியாக அமைகின்றது.

இது ஒரு சாராசரியான கணிப்பீடாக இருந்தாலும் நீங்களும் தனிப்பட்ட முறையில் இந்த கணிப்பீடுகளை செய்யமுடியும். ஆனால் சுலபமானது அல்ல. இதற்கு முதன்மையானது எல்லா வரவு செலவு கணக்குகளை எழுதிவைக்கும் பழக்கத்தில் இருக்கவேண்டும். இரண்டாவது, நாம் பொருட்களை வாங்கும் போது முன்பு GST, PST இப்பொழுது HST என அழைக்கபடும் வரித்தொகைகளை வேறாக கணிப்பிடவேண்டும்.

வீடு உள்ளவர்கள் நேடியாகச் சொத்து வரியை (Property Tax) செலுத்துகின்றார்கள். வாடகைக்கு இருப்பவர்கள் மறைமுகமாக (Indirect way) சொத்து வரியை செலுத்துகின்றார்கள். இதனையும் கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகின்றது. இதே போன்று உங்கள் வாகனங்களைத் திருத்த அல்லது பராமரிக்க செல்லும் போது சூழல் பாதுகாப்பு வரி (Environmental Tax) என்னும் வரி அறவிடப்படுகின்றது.

இப்படியாக நமக்கு தெரிந்தும் தெரியாமலும் பல்வேறு வகையில் வரிகளைச் செலுத்துகின்றோம். நாம் எவ்வளவு வருமானவரியை செலுத்துகின்றோம் என்பதனையும் கணக்கில் எடுத்து எல்லா வரிகளின் மொத்தத் தொகை எவ்வளவு என்று பாருங்கள். பின்னர் உங்கள் மாத வருமானத்தில் எத்தனை மாத வருமானத்தினை வரியாகச் செலுத்தியுள்ளீர்கள் என்பதனைக் கணக்கிட முடியும்.

கனடா நாடு உலக நாடுகளில் சிறந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றாக விளங்குகின்றது இப்படியான செயல்பாட்டுக்கு சிறந்த வரிக்கொள்கைகள், ஜனநாயக் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் செயல்பாடு, எல்லா சமூகங்களையும் இயன்றவரை சமமாக மதிக்கும் பண்பு, சிறந்த சமூகநலத் திட்டங்கள் என்பன அடிப்படைக் காரணியாக அமைகின்றன. எனவே நாம் செலுத்தும் வரி (Tax) சிறந்த நாட்டில் வாழும் தகுதியை எமக்குத் தருகின்றது.

முடிவுரையாக அரச மானியத்தில் தங்கியிருப்பவர்களுக்கு இக்கட்டுரை பொருத்தமற்றதாக இருந்தாலும். நம்மைச் சுற்றி என்ன நடைபெறுகின்றது என்பதனை அறியவும் எமது பொது அறிவினை வளர்த்துக் கொள்ளவும் உதவியாக அமையும் என நம்பலாம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழி மாநாடு என்ன கிழித்தது?

வெட்டியாய் முந்நூற்று எண்பது கோடியைக்
கொட்டிக் கரைத்த குடும்பத் திருவிழா
பொட்டுப் பூச்சியாய் வாழும் தமிழனை
முட்டாள் ஆக்கி முடித்த பெருவிழா!

மகனொரு பக்கம் மாநாட்டைத் திறந்தார்
மகளோ நானே எல்லாமாய்ப் பறந்தார்
மனைவியர் மருமக்கள் பேத்தியர் இருந்தார்
மற்றுள்ள சொந்தங்கள் முன்வரிசை நிறைந்தார்!

பாட்டால் புகழப் பாவலர் ஒருபுறம்
பல்லக்குத் தூக்கும் பேச்சாளர் மறுபுறம்
கேட்டுக்கேட்டு மு.க மனம்மிகக் குளிரும்
கேட்டநம் வயிறோ தீப்பற்றிக் கருகும்!

விருந்திட்ட இடத்தைக் கூட்டம் பிய்த்தது
வெளிஆய்வு அரங்கை ஈக்கள் மொய்த்தது
இருந்த தமிழ்நிலை நெஞ்சினைத் தைத்தது
'எழும்'இந்த இனம் என்றஎண்ணம் பொய்த்தது!

பள்ளியில் நம்தமிழ் கட்டாய மில்லை
அறமன்றப் படிகளைத் தமிழ்தொட்ட தில்லை
கல்வியில் உயர்நிலை தமிழ் எட்டவில்லை
கரைத்த பணத்துக்கு முழுப்பயன் இல்லை!

பேருக்கு ஈழத் தமிழராய் அழுகை
பெருங்கேடன் தில்லிக்கே கைகட்டித் தொழுகை
யாருக்கும் பெருநன்மை கூட்டாத கூட்டம்
யாருடைய ஆட்சிதான் தமிழ்த்துயர் ஓட்டும்?

- *தமிழேந்தி*

## சிந்தனைப் பூக்கள் பாகம் - 3 வெளியீடு

**சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதனின் சிந்தனைப் பூக்கள் பாகம் மூன்று கட்டுரைத் தொகுதி நூல் இந்த மாதம் 21ஆம் திகதி பிற்பகல் மார்க்கம் நகரசபை மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. நான்காவது பரிமாணம் வெளியீடாக இது பிரசுரமாகி யுள்ளது. வெளியீட்டு விழா தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற நூலாசிரியருடன் 905 201 2301 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.**

## விண்ணெந்திரன்..

விண்வெளி வீரர்களால், செய்வதற்குக் கடினமான பணி-களை இலகுவில் செய்து முடிப்பதே விண்ணெந்திரன்களின் உருவாக்கத்தின் பிரதான நோக்கமாகும். விண்வெளிச் செயற்பாட்டினைப் பிரதான நோக்காகக் கொண்டு இந்த விண்ணெந்திரன்கள் உருவாக்கப்பட்ட போதிலும், இவற்றின் செயற்பாடுகள் விண்வெளியுடன் மட்டுப்படுத்தப்படப் போவதில்லை. அணு உலைகள், எரி-மலைகள் எனப் புவியில் மனிதர்களால் செல்ல முடியாத இடங்களிலும் இவற்றினைப் பயன்படுத்த முடியும்.

விண்வெளியில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான கருவிகளைப்போன்று இந்த விண்ணெந்திரனிலும் PowerPC நுண்செயலியே (processor) பயன்படுத்தப்படுகின்றது. VxWorks நிகழ்நேர (real-time) இயங்குதளத்தின் மூலம் இயங்கும் இந்த விண்ணெந்திரன்களுக்கான கட்டுப்பாட்டு மற்றும் செயற்பாட்டு நிகழ்ச்சி நிரல்கள் யாவும் C மற்றும் C++ நிரல்மொழிகளைப் (programming languages) பயன்படுத்தியே உருவாக்கப்படுகின்றன.

தொடர்ச்சியாக அதிகரித்துவரும் கணினி மற்றும் நுண்செயலிகளின் திறன், காலப்போக்கில் அதிகச்தி வாய்ந்த செயற்கை அறிவூட்டலுடன் கூடிய விண்ணெந்திரன்களை உருவாக்கும் நிலையைக் கொண்டுவரும். அப்போது பால்வீதியையும் தாண்டி பரந்து விரிந்து கிடக்கும் பல புதிர்கள் அவிழ்க்கப்படும். மனிதன் தனது கற்பனைகளின் எல்லைகளையும் கடந்து பயணிக்கும் காலம் வரும், விண்ணெந்திரன்களின் வடிவில்.


CGA

*THE NAME YOU NEED FOR YOUR BUSINESS*



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

NIMAL VINAYAGAMOORTHY
Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A1 கொழும்பு

டிஜிட்டல் போட்டோ
ஸ்ரூடியோ & வீடியோ

முதல் தரமானஅனைத்து
போட்டோ, வீடியோ படப்பிடிப்புகள்
எல்லா வகையான போட்டோ
வீடியோ வேலைகள்



From:
அல்பத்துடன் போட்டோ
PACKAGES

25 - 5X7 பிறந்த நாள் $125.00
150 - 5x7 அரங்கேற்றம் $750.00
50 - 5x7 பூப்புனித
நீராட்டு விழா $250.00
75-5x7 திருமணவிழா $375.00
2 பாஸ்போட் 5 நிமிடத்தில் $5.00
2 சிற்றிசன் 5 நிமிடத்தில் $5.00
2 லான்டட் காட் 5 நிமிடத்தில்$5.00
2 அனைத்துவிதமான
ஐ. டி. 5 நிமிடத்தில் $5.00
3 - 5X7 ஸ்ரூடியோ
போட்டோ $15.00

ST-FRANCIS
L.L-3, 2296 EGLINTON AVE. E
@ BIRCHMOUNT ROAD
TORONTO, SCARBOROUGH, ON.

Cell: 416-752-4444
Tel: 416-755-2333
FAX: 416-755-4554
Web: www.tamilsyellowpages.com
E-Mail:www.typ@gmail.com




எஸ். கணேஷ்

# உலகக் கிண்ணம் - 2010
# ஸ்பெயின் சாம்பியன்

ஆபிரிக்க மண்ணில் முதன்முறையாக நடந்து முடிந்த 19வது உலகக்கிண்ண உதைபந்தாட்ட ஒரு மாத திருவிழாவின் 64வது போட்டியில் ஸ்பெய்ன் அணி 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் நெதர்லாந்து அணியைத் தோற்கடித்து உலக கிண்ணத்தைக் கைப்பற்றியது. ஸ்பெய்ன் உலக கிண்ணத்தை வென்றது இதுவே முதன் முறையாகும். அத்துடன், உலக கிண்ணத்தை வென்ற எட்டாவது நாடு என்ற பெருமையையும் பெற்றுள்ளது.

பத்தொன்பதாவது உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கடந்த யூன் மாதம் 11ஆம் திகதியிலிருந்து யூலை 11ஆம் திகதி நடைபெற்று முடிவுற்றது. மொத்தம் முப்பத்தியிரண்டு அணிகள் இதில் கலந்து கொண்டன. இதற்கு முன்னர் உலக கிண்ணத்தை வென்ற பிரேசில் (5 தடவை), இத்தாலி (4 தடவை), ஜேர்மனி (3 தடவை), ஆர்ஜன்டினா (2 தடவை), உருகுவே (2 தடவை) இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் (தலா ஒரு தடவை) இவ்வருடப் போட்டியில் பங்குபற்றின. இந்த ஏழு அணிகளிலிருந்து ஒன்று கூட இம்முறை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகவில்லை என்பது முக்கியமானது.

இது தவிர, ஆறு ஆபிரிக்க அணிகள் இதில் முதன்முறையாகக் கலந்து கொண்டது சிறப்பான அம்சம்.

காலிறுதி ஆட்டத்தல் யாவரும் எதிர்பார்த்திருந்த அனுபவம் வாய்ந்த சுப்பர் ஸ்டார்களை உள்ளடக்கிய ஆர்ஜன்டினா அணியை 4:0 என்ற கோல் அடிப்படையில் இளம் வீரர்களை உள்ளடக்கிய ஜேர்மன் அணி மண்கவ்வ வைத்தது. ஆனால் ஜேர்மன் அணியை அரை இறுதியாட்டத்தில் 1:0 என்ற கோல் அடிப்படையில் ஸ்பெய்ன் அணி வீழ்த்தியது. மறுமுனையில், நெதர்லாந்து அணி பிரேசில் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தும் அரை இறுதியில் உருகுவே அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. இந்த அணிகள் இரண்டும் இதற்கு முன்னர் உலகக் கிண்ணத்தை வென்றது இல்லை.

நெதர்லாந்து அணி 1974ஆம் ஆண்டு ஜேர்மனியிடமும், 1978இல் ஆர்ஜன்டீனாவிடமும் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்து வெற்றிக் கிண்ணத்தைக் கோட்டை விட்டது. எனவே இம்முறை எப்படியாவது கிண்ணத்தைக் கைப்பற்றிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு களம் இறங்கியது. ஸ்பெய்ன் அணி தனது இறுதி 32 ஆட்டங்களில் இரண்டில் மட்டுமே தோல்வி கண்டது. நெதர்லாந்து அணி இறுதியாக நடைபெற்ற 14 போட்டிகளில் எதிலும் தோல்வியைத் தழுவவில்லை.

சாம்பியன் ஆட்டம் ஆரம்பமான நேரத்திலிருந்து ஸ்பெய்ன் அணி தாக்குதல் ஆட்டத்தையே நடத்திக் கொண்டிருந்தது. முதல் இருபது நிமிடங்களும் ஸ்பெய்ன் வீரர்கள் நெதர்லாந்து வீரர்களை ஆடவே விடவில்லை. 90 நிமிட முடிவில் 0:0 நிலை காணப்பட்டது. இதனால் மேலதிக நேரம் (extra time) வழங்கப்பட்டது. இப்போட்டியின் போது ஒழுங்கீனமாக விளையாடியதற்காக 11 மஞ்சள் அட்டைகளும், ஒரு சிவப்பு அட்டையும் காட்டப்பட்டது. இறுதிப் பத்து நிமிடங்கள், நெதர்லாந்து அணி பத்து வீரர்களுடன் விளையாடும் நிலை இதனால் ஏற்பட்டது. 116வது நிமிடத்தில் ஸ்பெய்ன் அணியின் வீரர் ஆன்ட்ரஸ் இனியஸ்டா ஒரு கோல் போட்டு தமது அணிக்கு உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொடுத்தார்.

உருகுவே வீரர் டிகோ போர்லானுக்குச் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருது வழங்கப்பட்டது. ஜேர்மனி இளம் வீரர் தோமஸ் முல்லருக்கு (20 வயது) தங்கக் காலணி விருது வழங்கப்பட்டது. ஒவ்வொரு உலகக் கிண்ணப் போட்டியிலும் சிறந்த வீரர் ஒருவருக்கு தங்கப் பந்து விருது வழங்கப்பட்டு வருவது வழக்கம். பத்திரிகையாளரின் வாக்கெடுப்பின் மூலம் உருகுவே வீரர் டீகோ போர்லான் தங்கப் பந்தைப் பெற்றார். சிறந்த இளம் வீரருக்கான விருது பெற்ற ஜேர்மன் வீரர் முல்லர், அதிக கோல்கள் அடித்தமைக்கான தங்கக் காலணியைத் தமதாக்கிக் கொண்டார். இவர் இந்தத் தொடரில் 5 கோல்களை அடித்ததோடு, 3 கோல்கள் போட உதவியாகவும் இருந்துள்ளார். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

Any Referral Service

**JRB Universal Inc.**

Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

• Credit Counseling • Accounting & Tax Services •

**யசோ சின்னத்துரை**
கனடிய சட்டத்தரணி

• வீடு • காணி • வர்த்தகச் சட்டம்

The Law Offices of

**Yaso Sinnadurai**
Barrister & Solicitor, Notary Public

• Real Estate Law • Residential • Commercial Business Law

**Tel: 416 265 3456** **Fax: 416 265–2770**

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

*Motor Vehicle Accident*

*Criminal*

வாகன விபத்து!

கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..

உரிய



சட்ட ஆலோசனைகளுக்கு

**கலகலப்பு தீசன்**


416-803-5296

WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sabesan's Choice!



விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்

வீடு திருத்தம்
மற்றும் நிலக் கம்பளம்
பொருத்தும் வேலைகளில்
தன்னிகரற்றவர்!

சபேசன்

ஒருமுறை
தொடர்பு கொண்டால்
பலன் புரியும்!

416 605 1990

## நீங்கள் மீன் பிரியரா...

- பண்ணையில் வளர்க்கும் வஞ்சிர மீன்களின் கொழுப்பில் PCB போன்ற மாசுவகைககள் படிந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- பண்ணையில் வளர்த்த வஞ்சிர மீன்களிலிருந்து உள்ளூர் நீர்நிலைகளில் இயற்கையாக வாழும் வஞ்சிர மீன்களுக்கு நோய், ஒட்டுண்ணி வகைகள் தொற்றுகின்றன.
- வஞ்சிர மீன் பண்ணைகளிலிருந்து மாசு, கழிவு வகைகள் பிறக்கின்றன.
- பண்ணைகளில் வளர்க்கப்படும் வஞ்சிர மீன்களுக்கு வேறு மீன்வகைகளை ஊட்ட வேண்டியுள்ளது. ஆதலால் வேறு மீன் வகைகளுக்கு அதிக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இயற்கையாக வாழும் வஞ்சிர மீனில் PCBs வகைகள் குறைவு. பண்ணைகளில் வளர்க்கப்படும் வஞ்சிர மீனைவிட நீர்நிலைகளில் வாழும் வஞ்சிர மீன் சூழலைக் கெடுப்பது குறைவு. இயற்கையாக வாழும் வஞ்சிர மீனே பெரிதும் பேணியலடைக்கப்படுகிறது. வஞ்சிர மீனின் கொழுப்பையும் தோலையும் அகற்றி, மாசுமறுக்களைக் குறைத்து, ஆக்கி உண்ணவும். மேலதிக கொழுப்பு வடியும் வண்ணம் வாட்டி அல்லது சுட்டு எடுத்து உண்ணவும். மேலதிக கொழுப்பை வடியவிடவும்.

**சமைக்கப்படாத மீன் எப்படி?**

கருவுற்ற பெண்கள் சமைக்கப்படாத மீன், இறால், நண்டு வகைகளைத் தவிர்க்கும்படி கனடா சுகாதாரத் துறை விதந்துரைத்துள்ளது. கடும் நோய் தோற்றுவிக்கும் கிருமிகளை அவை கொண்டிருக்கலாம்.

**நான் கருவுற்றுள்ளேன். நான் மீன் உண்பதில்லை. நான் omega-3 மீன் அல்லது மேலதிகமாக மீன் எண்ணெய் உட்கொள்ள வேண்டுமா?**

கருவிலுள்ள குழந்தை விருத்தி அடைய உதவும் வண்ணம் நீங்கள் எவ்வளவு உட்கொள்ள வேண்டும் என்பது இன்னும் அறியப்படவில்லை. விபர நறுக்குகளைக் கவனமாக வாசித்துப் பார்த்து, மேலதிக உணவு வகைகளைத் தெரிவு செய்யவும். மாசுமறுக்கள் இல்லை என்று பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விபரம் பொறிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கவும். கடல்-தாவரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட மேலதிக omega-3 உணவுப்பொருள் விபரம் பொறிக்கப்பட்டுள்ளதா என்றும் பார்க்கலாம். மீன் ஈரல் எண்ணெய், பிறப்புக் குறைகளை விளைவிக்கும் உயிர்ச்சத்து A (Vitamin A) மிகுந்தது.

நான் மீன் உண்ணலாமா?

உள்ளூர் ஏரிகளிலும், ஆறுகளிலும் மக்கள் மீன் வேட்டையாடுவதுண்டு. அவற்றுள் சில உண்பதற்கு உகந்தவை ஆகா. வேட்டை மீன் வகைகளை உண்பதற்கு முன்னர் பின்வரும் இணையத்தளத்தில் உள்ள ஒன்ராறியோவில் வேட்டை மீன் உண்பதற்கான வழிகாட்டியைப் Guide to Eating Ontario Sport Fish பார்க்கவும்: www.ene.gov.on.ca/envision/guide/index.htm அல்லது இலவச பிர-திக்கு அழைக்கவும்: 1-800-820-2716.

**மீன் உண்பதால் சூழலுக்கு விளையும் தாக்கம் எப்படி?**

சூழலுக்கு உகந்த உற்பத்தியையே ரொறன்ரோ சுகாதாரத் துறை ஆதரிக்கிறது. மீன் வளங்களைத் தகுந்த முறையில் கையாளாவிட்டால், இயற்கைச் சூழல் பாதிக்கப்படக் கூடும். பிற நிர்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து விளையக் கூடும். மீன் வகைகள் அளவுக்கதிகமாகப் பிடிக்கப்படக் கூடும்.

சூழலுக்கு உகந்தவாறு சிறந்த முறையில் மீன் வகைகளைத் தெரிவுசெய்வது பற்றிய மேலதிக விபரங்களுக்கு நாடவேண்டிய இணையத்தளம்: www.seachoice.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



**10 டாலரிலிருந்து ஆரம்பித்து**
**7200 டாலர்கள் வரை**
**கனடா அரசாங்கம் வழங்கும்**
**நன்கொடையைப் பெற்று**
**(20 வீத Grant)**
**உங்கள் பிள்ளைகளதும்**
**பேரப்பிள்ளைகளதும்**
**கல்வி வாய்ப்பை**
**ஊக்குவியுங்கள்.**

**சமூக நம்பிக்கையையும்**
**நன்மதிப்பையும் பெற்ற**

**சிவா**
**கணபதிப்பிள்ளை**

**அவர்களை அழைத்து**
**விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

**416 438 0660, 416 438 3578**
**416 899 6044**
**இல்லத் தொலைபேசி:**
**905 472 1139**
**email**
**s.kanapathypillai@cefi.ca**

அறிவியல்

# விண்ணெந்திரன்
# Robonaut

விண்வெளிப் பயணங்கள் மிகவும் ஆபத்துடன் கூடியவை என்ற போதிலும், மனிதர்கள் இலகுவில் சஞ்சரிக்க முடியாத இடங்களுக்கு துணிவுடன் சென்று அவைபற்றி அறிந்துகொள்வதில் மனிதனுக்கு இருக்கும் ஆர்வமே தொடர்ந்தும் விண்வெளி ஆய்வு முயற்சிகளுக்காக பெருமளவு பணத்தினைச் செலவிட தூண்டுகோலாகக் காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் விண்வெளியிற் காணப்படும் வெப்பநிலை மற்றும் பிற சூழ்நிலைகள் மனித உடலுக்கு ஒத்துவராதவையாகவே காணப்படுகின்றன. உதாரணமாக, விண்வெளியில் வெப்பநிலை அதிகூடுதலாக 120 பாகை செல்சியசிலும், ஆகக்குறைவாக -100 பாகை செல்சியசிலும் காணப்படலாம். இந்த வெப்பநிலை அளவென்பது புவிவெப்பநிலையிலிருந்து பாரியளவு மாறுபாட்டைக் கொண்டிருப்பதுடன் மனித உடலினால் தாங்கிக்கொள்ள முடியாதது. அது தவிர விண்வெளியில் சுவாசிப்பதற்கு தேவையான வளி கிடையாது. எனவே, இவ்வாறான காரணங்களினால் மனிதர்களினால் சாதாரணமாக விண்வெளியில் நடமாட (space walk) முடியாது. விண்வெளிப் பயணத்திற்கெனச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட விண்வெளி ஆடைகளை (space suit) அணிந்தபடியேதான் நடமாட முடியும். விண்வெளி வீரரொருவர் விண்வெளி ஆடையை அணிந்து விண்வெளியில் நடமாட குறைந்தது மூன்று மணித்தியாலங்கள் தேவை.

இவ்வாறான பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தினால் முன்வைக்கப்பட்ட திட்டமே, மனிதர்களுக்குப் பதிலாக, விண்வெளிச் சூழலில் தாக்குப்பிடிக்கவல்லதும் மனிதர்களினால் நேரடியாக கட்டுப்படுத்த கூடியதுமான எந்திரன்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டமாகும். விண்வெளிக்கு அனுப்பப்படும் இவ்வாறான எந்திரன்களே விண்ணெந்திரன்கள் (Robonauts) என்றழைக்கப்படுகின்றன.

மனித உடலினை ஒத்த வடிவமைப்புடன் காணப்படும் இந்த விண்ணெந்திரன்கள் கட்டுப்பாட்டு அறையிலிருக்கும் கட்டுப்பாட்டு விண்வெளி வீரரின் கட்டளைகளுக்கேற்ப செயற்படவல்லது. கட்டுப்பாட்டு விண்வெளி வீரரின் உடற்பாகங்களில் இணைக்கப்பட்டிருக்கும் உணரிகள் அவரின் உடலசைவினை உணர்ந்து கட்டுப்பாட்டுத் தொகுதியூடாக கட்டளைகளை விண்ணெந்திரனுக்கு வழங்க விண்ணெந்திரன் அக்கட்டளைகளிற்கேற்ப இயங்கும்.

உண்மையில், விண்வெளிக்கு எந்திரனை அனுப்பும் இந்நத் திட்டமென்பது புதியதொரு திட்டமல்ல. 1965 இல் செவ்வாய் கிரகத்தை முதன்முதலில் படம்பிடித்த Mariner IV, 1997 ஆம் ஆண்டு செவ்வாயில் தரையிறங்கிய Pathfinder என்பனவும் பூமியிலுள்ள கட்டுப்பாட்டறையிலிருந்து இயக்கப்படும் ஒருவகை எந்திரன்தான்.

ஆனாலும் மனித உடலுருவைப்போன்றே தலை, இரு கண்கள், கைகள் மற்றும் விரல்கள் என்பவற்றைக் கொண்ட எந்திரன்கள் விண்வெளியில் முற்றிலும் புதியவையே. இவையே விண்ணெந்திரன்கள் என்றழைக்கப்படுகின்றன. பெரும்பாலான செயல்களில், இந்த எந்திரன்கள் மனிதர்களின் அசைவுகளை நேரடியாகப் பிரதிபலிப்பதால், விண்வெளி வீரர்கள் நேரடியாகச் சென்று செய்யவேண்டிய பெரும்பாலான வேலைகளை இந்த விண்ணெந்திரன்களின் உதவியுடன் செய்து முடித்துவிடலாம் என்பதே விஞ்ஞானிகளின் நம்பிக்கையாக உள்ளது.

விண்ணெந்திரன்களுக்கான ஆய்வுகள் இறுதிக்கட்டத்தை அடைவதற்கு குறைந்தது பத்து வருடங்களாவது ஆகும் நிலையில், நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம் இதற்கெனப் பெருமளவு நிதியினைச் செலவிடுகின்றது.

விண்ணெந்திரன் ஒன்று, விண்வெளி ஆய்வு நிலையத்தின் திருத்த வேலைகளுக்காகவோ அல்லது கட்டுமானப் பணிகளுக்காகவோ விண்ணுக்கு அனுப்பப்படும்போது, கட்டுப்பாட்டு அறையிலிருக்கும் விண்வெளி வீரர் ஒருவரினால் கட்டுப்படுத்தப்படும். விண்வெளி வீரரின் உடலசைவுகளைப் பிரதிபலித்தே விண்ணெந்திரன் செயலாற்றும்.

(30ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

**பல் சிகிச்சை நிலையம்**

BRACE FOR A GREAT SMILE

**பல் சிகிச்சையில் சகல துறைகளிலும் எமது சேவை**

DR. ILLANGO & ASSOCIATES


## Dr. M. ILLANGO
B.D.S Dip.Orth. (Oslo), General Practitioner Mainly Orthodontics
பற்களை ஒழுங்குபடுத்தும் பல் வைத்தியர்

## Dr. ALI ADIBFAR
D.D.S, M.D, F.R.C.D (C) , Oral Surgeon

## Dr. MEHRAN MOJGANI
D.D.S. Dip. Perio, Gum Specialist
பல் முரசு வைத்திய நிபுணர்

## Dr. JANAKI ILLANGO
B.D.S.
குடும்ப பல் வைத்தியர்

## Dr. TEHCHIN HSIEH
D.D.S
குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**


628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**

**416 321 6420**





- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org